விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி12 செவ்வாய்க்கிழமை (29.10.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 314

நந்தரா
புடைவையகம் அன் பான்சி ஹவுஸ்
* ரெடிமேட் ஆடைகள் * ஸ்கேட் அன் பிளவுஸ் * சல்வார் கமீஸ் * நவீன டிசைன்களில் பலரக சாறிகள்
* ஜீன்ஸ் துணிகள் * அழகு சாதனப் பொருட்கள்
போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
யாழ்வீதி, மானிப்பாய்

## மானிப்பாய் முகாமைச் சேர்ந்த
# இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப்புலிகளிடம் சரண்

## மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் நேற்று புலிகள் ஒப்படைத்தனர்

(அலுவலக நிருபர்)

**15வயதில் இராணுவத்தில் சேர்ந்த எறங்க றொசான் ஜெயவர்த்தன (வயது 17) என்ற இராணுவச் சிப்பாய் மானிப்பாய் இராணுவ முகாமில் இருந்து தப்பி வந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் சரணடைந்துள்ளார். சரணடைந்த இச் சிப்பாயை விடுதலைப்புலிகள் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியிடம் கையளித்தனர்.**

மானிப்பாய் இராணுவ முகாமில் இருந்து தப்பியோடி தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நேற்றுக்காலை சரண்டைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளினால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டார்.

கம்பகா மாவட்டத்தைச் சேர்ந்த எறங்க றொசான் ஜெயவர்த்தன (வயது 17) என்பவரே விடுதலைப் புலிகளினால் மனிதஉரிமை ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டவரா வார்.

தான் சரணடைந்தமை தொடர்பாக இராணுவச் சிப்பாய் தெரிவிக்கையில்

(10ம் பக்கம் பார்க்க)


சரணடைந்த சிப்பாய்


புலிகளின் அலுவலகத்தில்

## "ஏ" பொசிட்டிவ் இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் "ஏ" பொசிடிவ் வகை இரத்தத்திற்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும்,

"ஏ" பொசிடிவ் இரத்தம் அவசரமாக தேவைப்படுவதால் இவ்வகை இரத்தம் உள்ளவர்கள் இரத்ததானம செய்யும் படியும் இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சிவசங்கர் கேட்டுள்ளார். (ந-5)

உள்ளே க.பொ.த (சா.த) மாதிரி வினாத்தாள் ⇨

## இராணுவத்தளபதி நியமனத்தில் இழுபறி
# ஜனாதிபதி சந்திரிகாவுடன் பிரதமர் ரணில் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

புதிய இராணுவத் தளபதி நியமனம் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றியுள்ள நிலையில் நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியினை சந்தித்துப் பேசியுள்ளார்.

இச் சந்திப்பு நேற்றுக்காலை ஜனா...

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது தற்போதைய இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் லயனல் பலகல்லவை கூட்டுப்படைத்தளபதியாகப் பதவி உயர்த்திவிட்டு புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லொகான குணரத்தினாவை நியமிக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பிரதமர் ரணில் ...ளதுடன் மேஜர் ஜெனரல் லொகான் குணரத்தினாவை புதிய இராணுவத் தளபதியாக நியமிப்பதற்கு அனுமதி தருமாறும் கேட்டுக்கொண்டார்.

பிரதமர் ரணிலின் கோரிக்கையை செவிமடுத்த ஜனாதிபதி இந்த விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து முடிவுகள் எடுப்பதற்கு இரண்டு தினங்கள் அவகாசம் தேவை...

## எழுவை தீவுக்கடலில் மீன் பிடித்த 16 இந்திய மீனவர்கள் கைது.

(காரைநகர்)

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக கொணடிருந்த 16 இந்திய மீனவர்கள் 4 றோலர்களுடன் கைது செய்யப்பட்டு ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 3மணியளவில் எழுவைதீவு மேற்குக் கடற்பரப்பில் வைத்து நயினாதீவுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் காரைநகர் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் இவர்களை காரைநகர் கடற்படையினர் ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட 16 இந்திய மீனவர்களில் 13 பேரின் பெயர்கள் விபரங்கள் வருமாறு:-

(10ம்பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணிலின் ஐ.தே.மு அரசு மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம்

# பிரதமர் ரணில் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

புதிய இராணுவத் தளபதி நியமனம் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றியுள்ள நிலையில் நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியினை சந்தித்துப் பேசியுள்ளார்.

இச் சந்திப்பு நேற்றுக்காலை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது தற்போதைய இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் லயனல் பலகல்லவை கூட்டுப்படைத்தளபதியாகப் பதவி உயர்த்திவிட்டு புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லொகான குணரத்தினாவை நியமிக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் விளக்கிக் கூறியுள்ளதுடன் மேஜர் ஜெனரல் லொகான் குணரத்தினாவை புதிய இராணுவத் தளபதியாக நியமிப்பதற்கு அனுமதி தருமாறும் கேட்டுக்கொண்டார்.

பிரதமர் ரணிலின் கோரிக்கையை செவிமடுத்த ஜனாதிபதி இந்த விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து முடிவுகள் எடுப்பதற்கு இரண்டு தினங்கள் அவகாசம் தேவை எனவும் இந்த இரு தினங்களுக்குள்

(10ம் பக்கம் பார்க்க)

### அரசு – புலிகள் செயலணிக் குழுவை ரத்துச் செய்து

# கிழக்கு மாகாணத்திற்கு தனி ஆளுநரை நியமிக்குக!

## தேசியக் கூட்டுப் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கென அமைக்கப்படவுள்ள அரச-புலிகள் கூட்டுச் செயலணியை இரத்துச் செய்து கிழக்கு மாகாணத்திற்கு தனியான ஆளுநர் ஒரு[illegible] நியமிக்கப்பட வேண்டுமென தேசிய கூட்டுப் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பெருமபான்மையாக வாழும் சிங்கள முஸ்லிம் மக்களின் நலன் கருதியே இந்த வேண்டுகோளை அரசிடமும் ஜனாதிபதியிடமும் விடுப்பதாக இந்தப் பேரவையின் ஆரம்பகர்த்தாவான பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அவ்வறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அவசரகால சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தற்போது அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாததனால் அந்தப் பகுதிகள் சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளை ஒரு ஆளுநர் நிர்வகிப்பதனாலேயே பிரச்சினைகள் தோன்றுகின்றன. இது ஜனநாயகத்திற்கு விரோதமானது மட்டுமல்ல இலங்கையின் அரசியல்யாப்பிற்கும் விரோதமானது.

வடக்குக் கிழக்கு மாகாணம் ஒரு ஆளுநரினால் நிர்வகிக்கப்படுவதனால் 70வீதம் பெரும்பான்மை கொண்ட சிங்கள முஸ்லிம் மக்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன.

கூட்டுச் செயலணி அமைக்கப்படுவதனால் கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள முஸ்லிம் மக்கள் புலிகளின் நிர்வாகத்தில் சிறுபான்மையினராகக் கணிக்கப்படுவர். இந்த நிலை ஏற்படாமல் தவிர்பதற்கு

(10ம் பக்கம் பார்க்க)

றோலர்களுடன் கைது செய்யப்பட்டு ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 3மணியளவில் எழுவைதீவு மேற்குக் கடற்பரப்பில் வைத்து நயினாதீவுக் கடற்படையினர் வற்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட 16 இந்திய மீனவர்களில் 13 பேரின் பெயர்கள் விபரங்கள் வருமாறு:-

(10ம்பக்கம் பார்க்க)

# பிரதமர் ரணிலின் ஐ.தே.மு அரசு மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம்

### புலிகளின் வவுனியாப் பொறுப்பாளர் எழிலன் உரை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். இதனால் மக்கள் விடுதலை முன்னணி தொடர்பாக நாம் அதிக அக்கறை கொள்ளத் தேவையில்லை.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன தெரிவித்துள்ளார்.

சௌமிய இளைஞர் நிதியத்தின் வடக்குத் தெற்கு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் வவுனியாவில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே எழிலன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது. விடுதலைப் புலிகளாகிய நாம் எவரையும் அடக்கி ஆளவதற்கு ஆசைப்பட வில்லை நாம் உயிருக்குப் பயந்தவர்களும அல்லர்.

(10 பக்கம் பார்க்க)

### தாய்லாந்துப் பேச்சுக்குறித்து

# அரச பிரதிநிதிகளுடன் பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

இரண்டாம் கட்ட தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவுள்ள அரச தரப்புக் குழுவினருடன் நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சந்தித்துப் ஆலோசனை நடத்தியுள்ளார்.

நேற்று மாலை அலரி மாளிகையில் இந்த ஆலோசனை இடம் பெறறது.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் அமைச்சர்களான மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பேணாட் குணதிலக உட்பட அரசு தரப்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவுள்ள உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர்.

இக் சந்திப்பில் பிரதமர் ரணில்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலி வடக்கில் நாளை நடைபெறும் பேரணிக்குபொதுஅமைப்புகள்ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதி மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துமாறு கோரி நாளை புதன்கிழமை வலிவடக்குப் பகுதியில் இடம்பெறவுள்ள மாபெரும் எழுச்சிப்பேரணிக்கு பல்வேறு பொது அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

**வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகம்**

வலிவடக்கு மக்கள் நாளை நடத்தும் மாபெரும் எழுச்சிப் பேரணிக்கு நாம் முழு ஒத்துழைப்பை வழங்குகின்றோம். புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறும் இயல்பு வாழ்க்கை வலிவடக்கு மக்களுக்கு மறுக்கப்படுவதை நாம் வன்மையாக ஆட்சேபிக்கின்றோம்.

இரண்டு தசாப்தங்களாக இடம்பெயர்ந்து இருண்ட வாழ்க்கைவாழும் வலிவடக்கு மக்களை சொந்த இடத்தில் குடியமர அனுமதிக்க வேண்டும். இல்லையெனில் எமது போராட்டம் பல வடிவங்களை எடுக்கும்.

**குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்**

புரிந்துணர்வு ஒப்பந்தம் அனைத்து மக்களுக்கும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் என்று கடந்த ஏழு மாதங்களாக எதிர்பார்த்திருந்த வலிவடக்கு மக்கள் ஏமாந்தது மட்டுமன்றி விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட இம் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை தேவையற்றது. அதை அவர்களே பார்த்துக் கொள்ளட்டும் என்றவாறு நாட்கள் நகருகின்றன.

அடிப்படை மனிதவுரிமைகள் அனைத்துமே மறுக்கப்பட்ட நிலையில், நாடோடிகளாக, நடைப்பிணங்களாக வாழும் எமது மக்களின் விடிவுக்காக நடைபெறும் வலி - வடக்குத் தெற்குப் பொது அமைப்புகளின் ஒன்றிய எழுச்சிப் பேரணிக்கு எமது சங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றது.

**வலிகாமம் வடக்கு விவசாயிகள் சங்கம்**

வலிகாமம் வடக்குவிவசாயிகள் கடந்த இரண்டு தசாப்தங்களாக விவசாயநிலங்களை இழந்து அனுபவித்துவரும் இன்னல்களை யாவரும் அறிவர்.

எமது சொந்தநிலங்களில் விவசாயம் செய்வதற்கும் சொந்தமண்ணில் வசிப்பதற்கும் எமது சங்கம் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகள் அனைத்தும் இன்றுவரை எந்தவிதமான பலனையும் தரவில்லை நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டியதே ஒரேஒருவழியாகும்.

எனவே வலிகாமம் வடக்கு தெற்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் நாளை நடத்தும் எழுச்சிப்பேரணியில் அனைத்து வலி-வடக்கு விவசாயிகளையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

# முஸ்லிம்கள் ஒன்றுபடுவதன் மூலம் உரிமைகளை வென்றெடுக்க முடியும்

### பேரியல் அஷ்ரப் பொதுக்கூட்டத்தில் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளைக் குழப்புவது எமது நோக்கமல்ல.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும் பாராளுமன்ற உறுப்பினருமான பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

சாய்ந்த மருது பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவது அவசியம் நிரந்தர சமாதானத்துக்காக பிரார்த்திப்பவர்களில் நானும் ஒருத்தி.

மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ணுவதற்காக நாம் கூட்டங்களை நடத்தவில்லை மக்களை குழப்புவதும் எங்களுடைய நோக்கமல்ல.

இன்றைய காலகட்டத்தில் குழம்பிப் போயிருக்கும் முஸ்லிம் மக்களிடம் தெளிவை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமைப்பட வேண்டும் ஒற்றுமைப்படுவதன் மூலம் தான் நமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையில் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்து வரும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பகிஷ்கரிப்பை கைவிடவேண்டும் என்றும் சமாதானத்தை குழப்பிய பழி எம்மை வந்து சேரக்கூடாது எனவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்திருந்ததும் சுட்டிக்காட்டத்தக்கன. (உ-8)

# கடற்றொழிலை மேம்படுத்த அரசு - புலிகள் கூட்டுச் செயற்குழு

### கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

வடபகுதியில கடற்றொழிலை மேமபடுத்துவதற்காக கூட்டுச் செயற்குழு ஒன்றை நியமிக்க கடற்றொழில் கடல் வள அமைச்சர் மஹிந்த விஜயசேகர நடவடிக்கை எடுத்துள்ளார்.

இச்செயற்குழுவில் அரசாங்க பற்றும தமிழீழவிடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர்உட்பட 11பேர் அங்கம் வகிக்கவுள்ளனர்.

மன்னார் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழீழவிடுதலைப்புலி உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய போதே இதுதொடர்பாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது வடபகுதியில்இன்னும் 3மாதகாலப்பகுதியில கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை ஆரம்பித்து வைப்பதே தனதுகுறிக்கோள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

## கட்டிட நிர்மாண, வீதி அமைப்பு வேலைகளுக்குத்தேவையானகல்வகைகள் வழங்குநர்களைக் கோரல்

2002ம் ஆண்டுக்கான மாநகரசபையின் வேலைத் திட்டங்களுக்குத் தேவையான கீழ்க்காணும் கற்களை மாநகரசபை எல்லைக்குள விநியோகிபபதற்கான கூறுவிலைகளை எம்மால் கோரப்படும் சகல விளம்பரங்கள் அடங்கிய படிவம் தங்களால் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்து 07-11-2002ம் திகதி வியாழக்கிழமை முற்பகல 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அரக்குமுத்திரையிட்டு 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுபபிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| அளவு | வகை | தேவையானஅளவு | 1கியூப்விலை | உடன்வழங்கக்கூடியஅளவு |
|---|---|---|---|---|
| ¾'' | கிறேசர் கல் | 30 கியூப் | — | — கியூப் |
| ½'' | ,, | 10 ,, | — | — கியூப் |
| 1½'' | ,, | 20 ,, | — | — சியூப் |
| 2'' | ,, | 250 ,, | — | — கியூப் |
| 4'' | கையால்உடைத்தது | 225 ,, | — | — கியூப் |
| 6''/9'' | கிளறிஎடுத்த கல் | 25 ,, | — | — கியூப் |

**இ. இராமலிங்கம்**
மாநகரசபை, ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

திகதி: 28.10.2002

(கி-5184)


**நூற்றாண்டு**

சிறப்பு விருந்தினர்களாகவும் முன்னாள் உதவிவிவசாயப் பணிப்பாளர் செ.லிங்கநாத பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-5)

# ஒன்றிணைந்து செயற்பட சந்திரசேகரன் தயார்

(கொழும்பு)

மலையகத் தமிழ் மக்களின் முன்னேற்றம் கருதி மலையக அரசியல் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தயாராகஇருப்பதாக சமூகமேம்பாட்டு அமைச்சரும் மலையக மக்கள்முன்னணியின் தலைவருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ஹற்றன் இந்துமாசபையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

மலையகத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் கருதியும் மலையக தமிழ் சந்ததியினரின் நலன் கருதியும் மலையக மக்கள்முன்னணி ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராகவுள்ளது.

சமூக அபிவிருத்தி அமைச்சு மூலமாக அடுத்த வருடம் முதல் மலையக கல்விவளர்ச்சிக்கு பெருமளவுநிதி ஒதுக்கப்படவுள்ளது என்று குறிப்பிட்டார்.

(உ-8)

# ஈராக் மீது ஆயுதக் களைவு; அமெ. தலைமை தாங்கும் ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கெதிராக நடவடிக்கையெடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை தவறும் பட்சத்தில் அந்நாட்டின் மீது ஆயுதக்களைவை மேற்கொள்ளும் கூட்டு நடவடிக்கைக்கு அமெரிக்கா தலைமை தாங்கும் என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையினால் நிறைவேற்றப்படுவதற்கான நகல் பிரேரணையை அமெரிக்கா கையளித்துள்ளது.

எனினும் ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர அங்கம் வகிக்கும் ரஷ்யா பிரான்ஸ் போன்ற நாடுகள் இப்பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

அத்துடன் ஈராக் மீது போர் தொடுக்கும் வகையில் இத் தீர்மானம் தவறாகக் கருதப்பட்டு விடலாம் என்று இவ்விரு நாடுகளும் பீதியடைந்துள்ளன.

எனவே இச்சந்தர்ப்பத்தில் ஐக்கிய நாடுகள் உரிய முறையில் செயற்பட தவறினால் அல்லது சதாம் ஹுசைன் உலகை ஏமாற்ற நினைத்தால் சமாதானத்தின் போர்வையால் ஈராக்கிடம் உள்ள ஆயுதங்களைக் களைவதற்குத் தலைமை தாங்கப் போவதாக அதிபர் புஷ் இணங்கியுள்ளார்.

(சு-4

# பிறேசிலில் தொழிற்சங்கத் தலைவர் ஜனாதிபதியாகும் வாய்ப்பு

(பிறேசிலியா)

பிறேசிலின் ஜனாதிபதித் தேர்தல்இரண்டாவதுதடவையாக நேற்று முன்தினம்நடைபெற்றுள்ளது.

இத்தேர்தலில் மூத்த இடதுசாரியும், முன்னாள் தொழிற்சங்கத்தலைவருமான லூயி இனோசியா லூலாடிசில்வா பிறேசிலின் ஜனாதிபதியாக அறுதிப்பெரும்பான்மையுடன் தெரிவுசெய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் அறுதிப் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை. இதனையடுத்து, அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்களில் யாரை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்வது என்ற வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இவ்வாக்கெடுப்பில் இதுவரையும் எண்ணப்பட்டுள்ள 51 சதவீத வாக்குகளில் லூலாடி சில்வாவிற்கு 61 வீத வாக்குகள் கிடைத்துள்ளன. இதன்படி பிறேசிலின் அடுத்த ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்படவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவரை எதிர்த்து போட்டியிட்ட யோர்ஜ் செராவிற்கு 40 வீதவாக்குகளே கிடைத்துள்ளன.

லூலாடி சில்வா ஜனாதிபதியானால் பிறேசில் நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

(சு-4)

# மீளக் குடியமர்த்தக் கோரி நாளை வலி. வடக்கில் எழுச்சிப் பேரணி

(ஏழாலை)

வலி- வடக்கு மக்கள் மீளக் குடியமரக் கோரி நடத்தும் எழுச்சிப் பேரணி தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் மல்லாகம் பழம்பிள்ளையார் ஆலயமுன்றலில் வலி-வடக்கு, வலி-தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் குமாரவேல் தலைமையில் நடைபெற்றது.

அக்கலந்துரையாடலில், நாளை புதன்கிழமை வலி-வடக்கில்மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி நடைபெறும் எழுச்சிப் பேரணிக்கானஏற்பாடுகள்தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

எழுச்சிப் பேரணியானது நாளை மு.ப.10.00மணிக்கு மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை சென்றடையும். அங்குவைத்து இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, தெல்லிப்பழை பிரதேசசெயலர், யாழ். அரசஅதிபர், மனித உரிமைகள் ஆணைக்குழுத்தலைவர் ஆகியோருக்குமகஜர்கையளிப்பதுடன்அதனைத்தொடர்ந்து பொதுக்கூட்டம் ஒன்றுநடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுளளது.

மேலும் அன்றையதினம் நடைபெறஇருக்கும் எழுச்சிப் பேரணியில் கலந்துகொள்ளும் பொதுமக்களுக்கான வாகன வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட வேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்டபொது அமைப்புக்களை ஒன்றியத் தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, '' வலிகாமம் வடக்கு மக்களது விடிவை நோக்கிய எழுச்சிப்பேரணி'' என்ற தலைப்பில் ஒன்றியத்தினால் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அத்துண்டுப்பிரசுரத்தில், நாளை நடைபெறும் எழுச்சிப் பேரணியிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் பொதுக்கூட்டத்திலும் பொது மக்களைக்கலந்து கொள்ளுமாறும்,

நீண்டகாலமாக இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை நடத்தும் வலி- வடக்கு மக்களின் நிலையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்றஇக்கலந்துரையாடலில் வலி-வடக்கு புனர்வாழ்வுக் கழகம், வலி-வடக்கு விவசாயிகள் சங்கம், விவசாயிகள் சம்மேளனம் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கஉறுப்பினர்கள், சனசமூகநிலைய நிர்வாகிகள், வர்த்தகர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (த-12)

# பிரமுக வங்கி நடவடிக்கை விரைவில் ஆரம்பமாகும்

## அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரமுக வங்கியில் கணக்குகளை வைத்திருப்போர்குழப்பமடையத் தேவையில்லை என இலங்கை மத்திய வங்கி, பிரமுகவங்கி ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பிரமுகவங்கியின் வாடிக்கையாளர்களை பாதுகாக்கும் நோக்கத்துடனேயே வங்கி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டன என்று மத்திய வங்கியின் பணிப்பாளர்களில் ஒருவரான கே.எம்.டி ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இவ் வங்கியில் 15 ஆயிரம் பேர் கணக்குகளைவைத்திருக்கிறார்கள் இந்த வங்கி 310 கோடி ரூபாவை கொடுக்கல் வாங்கல் செய்திருக்கிறது.

தற்போது இலங்கைமத்திய வங்கியின் அதிகாரிகள்பிரமுக வங்கியிலுள்ள ஆவணங்களை சோதனையிட்டு வருகிறார்கள்.

இவ்வேலைகள் முடிவடைந்ததும் வங்கி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது அல்லது வேறு நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பான முடிவு எடுக்கப்படும்.

பிரமுகவங்கியின் நடவடிக்கைகளை மத்திய வங்கி கடந்த வெள்ளியன்று இடை நிறுத்தி வைத்துள்ளதும் தெரிந்ததே. (உ-8)

# ஐரோ. முதலீட்டு வங்கி 4 கோடி யூரோ கடனுதவி

(கொழும்பு)

ஐரோப்பிய முதலீட்டுவங்கி இலங்கைக்கு 4 கோடி யூரோ நாணயத்தை கடனாக வழங்க முன்வந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் துணை நிறுவனங்கள் அதன் கூட்டு முயற்சி நிறுவனங்கள் ஆகியன மேற் கொள்ளும் முதலீடுகளுக்கு இந் நிதி ஒதுக்கீட்டில் முன்னுரிமைவழங்கப் படவுள்ளது.

சர்வதேசரீதியில் ஐரோப்பிய நிறுவனங்களை இந்நிதி பலப்படுத்தும் என ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு இது குறித்து விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ-8)

# அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் அதிகரிப்பு

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் வருட ஆரம்பத்தில் இருந்து கடந்த வாரம்வரை சுமார் 600 க்கும் மேற்பட்ட இவ்வாறான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியல்களில் வைக்கப்பட்டிருப்போர், பொலிஸ் திணைக்கள பதவி உயர்வு, பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதுபோன்ற அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

# விமானப் படைக்கான ஆயுதக் கொள்வனவில் ஆயிரத்து ஐநூறு கோடி ரூபா மோசடி

## விசாரணைக்குழு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்கான ஆயுத தளபாடக் கொள்வனவில் ஆயிரத்து 500 கோடி ரூபா மோசடி இடம்பெற்றதாக இவ்ஆயுதக்கொள்வனவு தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் 1997, 1998 காலப் பகுதிகளில் விமானப்படைக்கு எம். ஐ-24 தாக்குதல் ஹெலிகொப்டர்கள் ஸி–130 ரக ஹேக்ஹியுலிஸ் விமானங்கள் 81 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டபோதே இம் மோசடி இடம்பெற்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுளளது.

இரு அரசாங்கங்களுக் கிடையிலேயே இவ் ஆயுதங்கள் கொள்வனவு இடமபெற்றாலும் அதற்கிடையில் தரகர் ஒருவர் இருந்தமையாலேயே இம்மோசடி இடம்பெற்றதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆயுதக் கொள்வனவு தொடர்பான விசாரணைகளை மேற் கொள்வதற்கு சட்டத்தரணி மிலிந்த வீரசூரிய தலைமையிலான குழுவொன்றினை பாதுகாப்பு அமைச்சர் நியமித்திருந்தமையும்,

இக் குழு அண்மையில் இது தொடர்பான அறிக்கையை பாதுகாப் புஅமைச்சர் திலக் மாரப்பனவிடம் சமர்ப்பித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தென்கிழக்காசியாவில் செயலகம் அமைப்பு

(கோலாலம்பூர்)

தென்கிழக்காசிய வட்டாரத்தில் பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சி தலைமைச் செயலகத்தை உருவாக்கும்படி அமெரிக்கா மலேசியாவைக் கோரியுள்ளது.

மேற்படி செயலகத்தில் அமெரிக்கர்களும், மலேசியர்களும் பணியாற்றவுள்ளனர்.

இந்தச் செயலகம் எதிர்வரும ஜனவரி மாதம் ஆரம்பித்து, தனது பணிகளைத் தொடர்ந்து செய்யவுள்ளது.

இது தொடர்பாக, மலேசியத் துணைப் பிரதமர், தீவிரவாதிகளின் பயங்கரத் தாக்குதல்களை எதிர்கொள்ளத் தக்க வகையில் தென் கிழக்காசிய நாடுகளுக்கு இச்செயலகம் உதவும் என்று கருத்து தெரிவித்துள்ளார். (சு-4)

## இந்திய மீனவரின் அடாவடி குறித்து

# வடமராட்சி மீனவர்கள் க.கா.குழுவுக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக்கடற்பரப்பில் அடிக்கடி இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாகவடமராட்சி சுப்பர்மடம் கடல்தொழில் சங்கம், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துளளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

யுத்த சூழ்நிலைகாரணமாக கடந்த 20 வருட காலமாக சுதந்திரமாக தொழிலில் ஈடுபட நாம் அனுமதிக்கப்படவில்லை.

தற்போதைய அமைதிச் சூழ் நிலைஎம்மை சுதந்திரமாக ஆழ்கடலில் மீன்பிடிக்க, அனுமதித்துள்ள போதிலும் பெருந் தொகையான இந்திய றோலர்கள் எமது கடலில் நுழைந்து எமதுமீனவர்களின் பெறுமதி வாய்ந்த சொத்துக்களை நாசமாக்குகின்றன.

இதனால் எமது தொழிலாளர்கள் தொழில் புரிவதில் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

நிம்மதியாக இனியாவது தொழில் செய்யலாம் எனக் காத்திருந்த எமக்கு இது பெருப்ஏமாற்றத்தை அளித்துள்ளது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

## நாகர் கோயிலில் மீள் குடியமர்வு

# இன்று செயலகத்தில் மீளக் கூடி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

நாகர் கோயில் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான கூட்டம் இன்று யாழ். செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

மேறபடி மக்களை மீளக் குடியமர்த்துவது பற்றிய கூட்டம்ஒன்று நேற்று முன் தினம் உசன் மகா வித்தியாலயத்தில் 523 வது பிரிவு கட்டளை அதிகாரி தலைமையில் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் மீள் குடியமர்வு தொடர்பாக தீர்க்கமான எந்தவொரு மூடிவும் எடுக்கப்படாத நிலையில் இன்றைய செயலகக் கூட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்படவுள்ளது. (உ)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப- அலுவலக எல்லைகுட்பட்ட கலாசாலை வீதி, முருகன் வீதி, பாற்பண்ணை வீதி, மற்றும்இராஜ வீதிப்பகுதிகளில்கட்டாக்காலி நாய்கள பிடித்துஅழிக்கும்நடவடிக்கை நாளை காலை 8.00 மணி தொடக்கம்மேற் கொள்ளப்படவுள்ளது எனவும்,

இதேவேளை வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தகடுகளை பிரதேச சபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச சபைத்தலைவர் அறிவித்துள்வார். (த-5)

## நிதானம்

இருக்க முடிந்தது?, என்று நண்பர்கள் கேட்டார்கள். நான் நிதானம் தவறியிருந்தால் எங்கள் உபாத்தியாயர், மறு கன்னத்திலும் அறைந்திருப்பார்.. அது அதைவிடப் பல மாக இருக்கும்! என்றான் அவன்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அமைச்சர் மகேஸ்வரன் இந்தியாவில்

(யாழ்ப்பாணம்)

இந்து சமயவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் விரைவில் கொழும்பில் இடம் பெறவுள்ள இரண்டாவது -உலக இந்துமாநாடு பற்றிய அலுவல்கள் நிமித்தம் கடந்த சனியன்று அமைச்சர் தி.மகேஸ்வரன இந்தியாபயணமானார்.

அங்குள்ள அறிஞர்களுடன் மாநாடு பற்றி ஆலோசனைகளை நடத்துவதும் அவர்களை மாநாட்டில் பங்கேற்கச் செய்வதுமே அமைச்சரின் பயண நோக்கமாகும். (உ)

# தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் தமிழ்த்தினவிழா நாளை காலை 9.30மணிக்கு கல்லூரி மண்டபத்தில் செல்வன் ம.சசிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி ப.இரத்தினவேல் முதன்மை விருந்தினராகக் கலந்து கொளளவுள்ளார். (த-5)

# க. பொ. த. (சா-த) முன்னோடிப் பரீட்சை வட-கிழக்கில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் க.பொ.த. சாதாரண முன்னோடிப் பரீட்சையினை 2003ம்ஆணடில்இருந்து நடத்துவதற்கு தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையினர் நடவடிக்கை எடுத்து வருவதாக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

இச்செயற்றிட்டத்தைநடைமுறைப்படுத்த கல்வி அபிவிருத்திக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளதாகவும் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 1995 ஆண்டில் முன்பு யாழ்பபாணத்தில் வருடம் தோறும இப்பரீட்சை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை -2002

## General Certificate of Education (Ord. Level) Model Examination - 2002

கணிதம்- 11
மூன்று மணித்தியாலம்

ஆக்கம்: சி.டியூக் பல்குணன்லாலா.
கணித ஆசிரியர்
(யா/மல்லாகம் மகா வித்தியாலயம்)

### முதலாம் வினா உட்பட எட்டு வினாக்களுக்கு விடையளிக்க

01\. 1. தொட்டியொன்றை ஒரு குழாய் சீரான கதியில் நீரால் நிரப்புகின்றது. 1நிமிடத்தில் தொட்டியின் $^4/_{25}$ பங்கு நிரம்புமாயின் தொட்டி நிரம்ப எடுக்கும் காலம் எவ்வளவு?

(2 புள்ளி)

2\. A,B என்னும் இரு நகரங்கள் 240 km இடைத் தூரத்தில் உள்ளன.A,B இரு நகரங்களிலிருந்தும் இருவர் முறையே 28km/h,32km/h கதிகளில ஒருவரை நோக்கி ஒருவர் புறப்படுகின்றனர்.புறப்பட்டு எவ்வளவு நேரத்தில் சந்திப்பர்? சந்திப்பு நகரம்A இலிருந்து எவ்வளவு தூரத்தில் நடைபெறும்?

(5 புள்ளி)


3\. $ax^2+bx+c$ இனை காரணிப்படுத்த, (x+2)(3x-5) என வருமெனின் a,b.c இன்பெறுமதிகளைக் கூறுக?

(6 புள்ளி)

4\. மு.ப 7.00 மணிக்கு மணிக்கூடொன்றின் மணி,நிமிட முட்களுக் கிடையிலுள்ள கோணத்தின் அளவு யாது?

(2 புள்ளி)

5\.



1cm ஆரையுடைய நான்கு வட்டங்கள் ஒன்றையொன்று தொட்டபடிஉள்ளன. நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?

(3 புள்ளி)

6\. 1 தொடக்கம் 50 வரையுள்ள எண்களுள்

அ. முக்கோணியெண்ணாகவும் சதுர எண்ணாகவும் காணப்படும் எண்கள் இரண்டு தருக?

(4 புள்ளி)

ஆ.எண்ணின் காரணிகள் அனைத்தினதும் கூட்டல் எண்ணின்இருமடங்கிற்குச் சமனாக வரும் தன்மையுடைய எண்கள் இரண்டு தருக?

(6 புள்ளி)

இ.2,3,4,6,8,12,16 ஆகியவற்றால் வகுக்கும் போது மீதமாக முறையே 1,2,3,5,7,11,15 என்பவற்றைத் தரக் கூடிய எண் எது?

(4 புள்ளி)

7\. அ.$1cm^2$ எத்தனை $mm^2$ இற்குச் சமனாகும்?

(2 புள்ளி)

ஆ.சீரான குறுக்கு வெட்டு முகம் உள்ள தொட்டியுள் 12cm உயரத்திற்கு நீர் இருந்தது.பின் குழாய் ஒன்றால் நீரினை தொட்டியுள் இறைத்த போது நீர்மட்டம் செக்கனுக்கு 2cm வீதம் உயர்ந்தது, Ycm நீர் மட்ட உயரத்தையும்,x செக்கன் நீரிறைக்கப்பட்ட நேரத்தையும் குறிப்பின் x,y என்பவற்றினிடையே ஒரு தொடர்பினை எழுதுக?

(3 புள்ளி)

8\. பல்கோணியொன்றின் 9 அகக் கோணங்கள் ஒவ்வொன்றும் $150^0$ அளவுடையன அதன் மீதிஅகக்கோணங்கள் ஒவ்வொன்றும் $165^0$ அளவுடையன. பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை n எனின்

அ.$165^0$ அளவுடைய அகக்கோணங்களின் எண்ணிக்கையை n இல் தருக?

(1 புள்ளி)

ஆ.n இல் ஒரு சமன்பாடு எழுதுக?

(2 புள்ளி)

இ.பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?

(2 புள்ளி)

02\. விடுதியொன்றில் தங்கியிருக்கும் 34 பேரில் விடுதியிலேயே உணவருந்துவோர் விபரம் பின்வருமாறு; காலையுணவு உண்போர் 15 பேர், மதியவுணவு உண்போர் 18 பேர், இரவுணவு உண்போர் 19பேர் காலையுணவையும், மதியவுணவையும் உண்போர் 12 பேர், மதியவுணவும்,இரவுணவும் உண்போர் காலையும்உண்கின்றனர். காலையுணவும், இரவுணவும் உண்போர் 10 பேர்.காலையுணவை உண்போரனைவரும் ஏனைய நேரங்களில் ஒரு நேரமேனும் விடுதியில் உணவருந்துகின்றனர்.

அ.வென்படத்தில் தகவலைக் குறிக்க,

ஆ.மூன்று நேர உணவையும் விடுதியில் உண்போர் எத்தனை பேர்?


இ.ஒரு நேரமேனும் விடுதியில் உண்ணாதோர் எத்தனை பேர்?

ஈ. ஒரு நேரம் மட்டும் விடுதியில் உண்போர் எத்தனை பேர்?

உ.இவர்களுள் ஒருவரை எழுமாறாகத் தெரிவு செய்தால் அவர் விடுதியில் காலையுணவு அருந்தாதவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

(14 புள்ளி)

03\.



10.5 cm ஆரையுடைய கோளமொன்று உருளைவடிவப் பாத்திரமொன்றினுள் வைக்கப்பட்டுள்ளது. கோளம்,பாத்தித்தினுள் மட்டுமட்டாக உள்ளடங்கியுள்ளது.

அ.பாத்திரத்தின் உயரமென்ன?
ஆ.பாத்திரத்தின் கொள்ளளவு யாது?
இ.கோளத்தின் கனவளவு யாது?
ஈ. பாத்திரத்தின் எஞ்சிய பகுதியுள் நீர் நிரம்பியிருந்தால் நீரின் கனவளவு யாது?
உ.கோளத்தை அகற்றிய பின் அந் நீரினை உருளைப் பாத்திரத்தினுள் எஞ்சவிட்டால் நீர் மட்ட உயரம் யாது?

(14 புள்ளி)

04\.

1\. ஒரு வட்டவில்மையத்தில் எதிரமைக்கும் கோணம் அதே வில்லினால் எஞ்சிய பரிதியிலுள்ள யாதுமொரு புள்ளியில் எதிரமைக்கப்படும் கோணத்தின் இரு மடங்கு எனக் காட்டுக.

2\. நாற்பக்கல் ABCD இல் AB//CD. AD=BC. AB>CD. ஆகும்.
அ. ABCD ஒரு வட்ட நாற்பக்கல் எனக் காட்டுக.
ஆ. AD இற்கு சமாந்தரமாக வரையப்படும் BTநீட்டப்பட்ட DC ஐ T இல் சந்திக்கின்றது.$C\hat{T}B=68^0$ எனின் நாற். ABCD இன் கோணங்களைக் காணிக்க,

(14 புள்ளி)

05\.

1\. $Y=3+2x-x^2$ இன் வரைபினை $-2\leq x\leq 4$ என்ற x இன் பெறுமானங்களுக்கு வரைவதற்கு கீழே தரப்பட்ட அட்டவணையை பூர்த்தி செய்க.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| y | -5 | - | 3 | 4 | - | - | -5 |

2\. இரு அச்சுக்களிலும் 10 சிறிய சதுரங்களை ஓர் அலகு எனக் கொண்டு வரைபினை வரைக.

3\. உமது வரைபில் இருந்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
அ. சமச்சீரச்சின் சமன்பாடு எது? அதனை வரைக.
ஆ. $3+2x-x^2$ இன் உயர்வுப் பெறுமானம் யாது?
இ. x அதிகரிக்கும் போது சார்பு நேராகவும் குறைந்து கொண்டும் செல்வது x இன் எப்பெறுமான வீச்சில் எனத் தருக?
ஈ. $x^2-2x-1=0$ என்ற சமன்பாட்டின் மூலகங்களைக் காண்பதற்கு வரைய வேண்டிய நேர் கோடு எது?
உ.$x^2-2x-1=0$இன் வர்க்க மூலங்கள் எவை?

(14 புள்ளி)

06\.


1\. கூட்டல் தொடரொன்றின் n ஆம் உறுப்பு 5n-1 ஆகும்.
அ.தொடரின் முதல் மூன்று உறுப்புக்களையும் எழுதுக.
ஆ.தொடரின் 20 ஆம் உறுப்பு எது?
இ. தொடரின் 20 ஆம் உறுப்பிலிருந்து 40 ஆம் உறுப்பு வரையுள்ள உறுப்புக்களினகூட்டுத் தொகை யாது?

2\. 3,4,8 என்பவற்றினிடையே மூன்று பெருக்கலிடைகளை எழுதுக?

(14 புள்ளி)

07\. 1. இணைகரத்தின் நான்கு பண்புகளையும் தருக.

2\.




சரிவகம் PQRS இல் PQ//SR.X,Y என்பன முறையே PS,QR என்பவற்றின் நடுப்புள்ளிகள். Xனூடாக QR இற்குச் சமாந்தரமாக வரையப்பட்ட நேர் கோடு நீட்டப்பட்ட QP இனைMஇலும், SRஇனை N இலும் சந்திக்கின்றது.

அ. QR இற்குச் சம நீளமான கோடு எது? காரணம் தருக.

ஆ.$\triangle$MPX$\equiv\triangle$NSX எனக் காட்டுக.

இ. NX=RY எனக்காட்டுக.

ஈ. XY//MQ எனக் காட்டுக.

(14 புள்ளி)

(தொடரும்...)

### 21.10.2002 அன்று வெளிவந்த விஞ்ஞானம் பகுதி I இன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) - III | 11) - IV | 21)- III | 31) - III |
| 2) - III | 12) - III | 22) - I | 32) -II |
| 3) - II | 13) - II | 23)- IV | 33) -II |
| 4) - I | 14) - II | 24) -II | 34) -II |
| 5) - II | 15) - IV | 25) - I | 35) -III |
| 6) - I | 16) - II | 26) -II | 36)) - I |
| 7) - III | 17) - I | 27) - II | 37) -IV. |
| 8) - I | 18 )- III | 28) -I | 38) -II |
| 9) - I | 19 )- III | 29) -III | 39) -IV |
| 10) III | 20) - I | 30) - IV | 40) -I |

### 28.10.2002 அன்று வெளிவந்த கணிதம் பகுதி I ன் விடைகள்.

1\) - ரூ64.80
2\) - x=0அல்லதுx=6
3\) - $3\ ^{53}/_{57}$
4\) - 1kg அதிகரிப்பு
5\) - $80cm^2$
6\) - $3000cm^2$
7\) - 21
8\) - ரு.x+y+z
9\) - 0
10\) - $x={}^{l}/_{m-n}$
11\) - $^{2(x+1)}/_{(x-2)(x-1)}$
12\) - $p=52^0,q=76^0$
13\) - I $\triangle$ABC $\equiv\triangle$PQR ,
II கோ:கோ:ஒ.ப
14\) - 420
15\) - வருடம் 60 %
16\) - $1^2/_3$
17\) - y=4x
18\) - $T_1=0,T_2=3$
19\) - a=6
20\) - 72 *l*
21\)- 0.04
22\) I- 560m
II-$8400m^2$
23\)- 14,21,35
24\) - 8.00
25\) - 1
26\) -10
27\) I-7
II-23
28\) -1.398
29\) - 7,11
30\) B இனை மையமாகக் கொண்டOB இனை ஆரையாகவும் கொண்ட கால் வட்டவில

# இன்று ஒரு தகவல்

## நிதானம் தவறலாமா?

அந்தக்காலத்தில் குருகுல வாசம் செய்தே படித்தல் வேண்டும். ஆசிரியர் என்பவர் ஆசிரமத்திலேயிருப்பார். அங்கே போய் அவருக்குத் தொண்டுகள் செய்யவேண்டும். துணிகளை துவைத்துப் போடவேண்டும். தூங்கும்போது காலைப் பிடித்து விடவேண்டும். புழுக்கமாக இருந்தால் விசிறவேண்டும். அப்படியே அவ்வப்போது அவர் சொல்லிக் கொடுக்கிற பாடங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் சொல்லிக்கொடுக்கிற பாடங்களை ஓலைச் சுவடிகளில் எழுதிக்கொள்வார்கள். ஆக குருகுலவாசம் என்பது மனத்தையும் பண்படுத்தும். அறிவையும் பண்படுத்தும். அப்படி ஒருபயிற்சி அது.

அந்தக்காலத்தில் பஞ்ச பாண்டவர்கள் ஒரு குருகுலத்திலே படிக்கப்போனார்களாம். ஏற்கனவே அங்கே ஒரு பதினைந்துபேர் இருந்தார்களாம். இவர்களையும் சேர்த்துமொத்தம் இருபது பேர். எல்லோரும் மிகுந்த ஆர்வத்தோடு அங்கே தங்கிப்படித்துக்கொண்டிருந்தார்கள். ஆண்டுகள் இரண்டு கடந்தன. அனைவரும் ஊருக்குத் திரும்பவேண்டிய நேரம், ஆசிரியர் ஒவ்வொருவராகக் கூப்பிட்டார். 'இதுவரையிலும் என்ன கற்றுக்கொண்டாய்?' என்றுகேட்டார்.

அவரவர்கள் தாங்கள் எழுதி வைத்ததைச் சொன்னார்கள். அங்கு படிக்க வந்தவர்கள் எல்லோருமே புத்திசாலிகள், அதுமட்டுமல்ல பலர் அரச குடும்பத்தைச்சேர்ந்தவர்கள். ஆளப்பிறந்தவர்களாக இருப்பவர்கள், எனவே, அவர்களிடம் அபாரமான கல்வியறிவை எதிர்பார்த்தார்.

ஒருவன் வந்தான் -தான் எழுதிவைத்திருந்த சரித்திர பாடம் பூராவையும் படித்துக் காண்பித்தான். இன்னொருவன் வந்தான் - தான் எழுதி வைத்திருந்த பூகோள பாடம் பூராவையும் படித்துக் காண்பித்தான், இப்படி ஒவ்வொருவராக வந்து தாம் கற்றதைப் படித்துக் காட்டிவிட்டுப் போனார்கள். கடைசியாகத் தருமர் வருகிறார். பேசாமல் நிற்கிறார். தலையில் இருந்த ஓலைச் சுவடிக் கட்டைக் கூட அவர் பிரிக்கவில்லை. ஆசிரியர் இவரிடம் தான் அதிகம் எதிர்பார்த்தார். ஆனால் இவரோ பேசாமல் நின்று கொண்டிருக்கிறார். நீ என்ன கற்றுக்கொண்டாய்? சொல்! ஓலைச் சுவடியைப் பிரித்துப் படி!' என்றார் அந்த முனிவர். தருமர் அசையவேயில்லை. மெதுவாகச் சொன்னார். ஐயா... நான் கற்றுக்கொண்டது ஒன்றே ஒன்றுதான். அதுவே வாழ்க்கையில் எனக்கு மிகவும் முக்கியமான பாடமாக அமையும்' என்று 'என்னிடம் இரண்டு வருடகாலமாகப் படித்து விட்டு கடைசியில் கற்றுக் கொண்டது ஒன்றே ஒன்றுதானா?' என்றார் முனிவர்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. மற்ற மாணவர்களை விட இவர் பண்பில் உயர்ந்தவர். அறிவில் சிறந்தவர் வயதில் முதிர்ந்தவர். இவரே இப்படிச் சொன்னால் மற்றவர்களின் நிலைமை என்ன ஆகும். அவர்கள் மிகவும் கெட்டுப் போய் விடுவார்களே!

'தருமா! நன்றாக யோசனை செய்து பதில் சொல். இரண்டு ஆண்டுகாலமாக நீ கற்றுக் கொண்டது என்ன என்று தானே கேட்கிறேன்! என்றார் முனிவர் முனிவர் சற்றுக் கோபமாக. தருமர் முகத்தில் எந்தவித மாறுதலும் இல்லை. இல்லை ஐயா! இரண்டு வருடமாக நான் கற்றுக்கொண்ட முக்கியமான பாடம் ஒன்றே ஒன்றுதான் முனிவரின் கோபம் அதிகமாயிற்று.

''உனக்கு வெட்கமாக இல்லையா' உன்னை விட வயதிலே குறைந்தவர்கள் எவ்வளவு பாடம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.. எவ்வளவு விரிவாக அவர்கள் படித்துக் காட்டினார்கள், நீயும் கூட நிறையக் குறித்து வைத்திருக்கிறாய் தானே? அதை ஏன் பிரித்தும் படிக்கக் கூடாது?' என்றார்.

'ஐயா! நான் சொல்வது உங்களுக்கு ஏமாற்றமாக இருந்தால் என்னை மன்னிக்கவேண்டும். நான் மிகவும் முக்கியமான பாடமாகக் கற்றுக் கொண்டிருப்பது ஒன்றே ஒன்றுதான். மற்ற எதையும் எடுத்துச் செல்வதற்கு நான் விரும்பவில்லை? என்றார் தருமர். இதைக்கேட்டவுடன் எல்லாமாணவர்களும் சிரித்து விட்டார்கள். அவ்வளவுதான் முனிவருக்குக் கோபம் அளவுக்கு மீறிவந்து விட்டது. ஓங்கியறைந்து விட்டார்- தருமர் கன்னத்தில். தருமரின் கன்னம் சிவந்துபோயிற்று கண்கள் கலங்கி விட்டன. ஆனாலும் அவர் அமைதியை இழக்கவில்லை, தலைகுனிந்து நின்றார். இவருடைய பிடிவாதம் முனிவருக்கு இன்னும் ஆத்திரத்தை உண்டாக்கியது மறு கன்னத்திலும் அறைந்து விட்டார். எல்லோரும்பயந்து போய் அமைதியாக நின்று கொண்டிருக்கிறார்கள்.

முனிவர் கத்துகிறார். 'அப்படி நீ கற்றுக் கொண்ட அந்த முக்கியமான பாடம் தான் என்ன? அதையாவது சொல்! என்கிறார். ஐயா! அதை மட்டும் ஓர் ஓலைச் சுவடியில் தனியாகக் குறித்து வைத்திருக்கிறேன். இந்தாருங்கள்! இதை நீங்களே படித்துப்பாருங்கள்' என்று தருமா ஓலைச் சுவடியை நீட்டினார். முனிவர் அதை வாங்கிப் பிரித்தார். சத்தம் போட்டுப் படித்தார்.

'எப்படிப் பட்ட சோதனை ஏற்பட்டாலும் ...நிதானம் இழந்து கோபத்துக்கு ஆளாகக் கூடாது! இது தான், அந்த ஓலைச்சுவடியில் எழுதப் பட்டிருந்தது. அந்த ஒருகணத்திலேயே முனிவரும், எல்லா மாணவர்களும் தருமரைப் புரிந்துகொண்டார்கள். அவர் கற்றுக் கொண்டது ஏட்டுச் சுரைக்காய் அல்ல, வாழக்கையில் பயன் படக் கூடியமுக்கியமான அனுபவப்பாடம் அது.

முனிவர்கண்களிலே கண்ணீர். தருமரை அன்போடு கட்டித் தழுவிக் கொண்டார். அப்புறம் சொன்னார். தருமா! என்னை மன்னித்து, விடு...நீ மாணவன் அல்ல- ஆசிரியன்-நான் இதுவரை தெரிந்து கொள்ளாத அனுபவப் பாடத்தை நீ இப்போதுஎனக்குக் கற்றுக் கொடுத்து விட்டாய். நான் உனக்கு ஆசிரியன் என்று சொல்லிக் கொள்வதிலேஎனக்குத்தான் பெருமை என்று

நிதானம் தவறக்கூடாது என்பது இன்றைய இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய ஒருமுக்கியமான பாடம். நிதானம் தவறாத சில வித்தியாசமான இளைஞர்களும் உண்டு. அவர்கள் எப்படி தெரியுமா?

ஓர் ஆசிரியர் மாணவனை ஒரு கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டார்: இவன் நிதானம் தவறவில்லை. அமைதியாக நின்று கொண்டிருந்தான். 'அவர் ஒரு முறை அறைந்ததும் எப்படி உன்னால் நிதானம் தவறாமல்

(3-ம் பக்கம் பார்க்க)

# பளைப் பிரதேசத்தில் டெங்கு

# நோய் பரவும் அபாயம் கண்டறிவு

## ஒழிப்பு நடவடிக்கை மும்முரம்

(யாழ்ப்பாணம்)

பளைப் பிரதேசத்தில் டெங்கு மற்றும் மலேரியா நோய்களைப் பரப்பும் நுளம்புக் குடம்பிகள் பெருமளவில் இனம் காணப்பட்டுள்ளன.

கடந்த 24ஆம் திகதிமுதல் 26 ஆம் திகதி வரையான 3தினங்கள் கிளிநொச்சி மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரிபணிமனையின் பூச்சி இன ஆய்வுக்குழுவினர் இப்பகுதியில் மேற்கொண்ட திடீர் ஆய்வில் இவ் விடயம்கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வகை நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவான சூழல் இங்கு நிலவுவதும் இவ் ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, கிளிநொச்சி மாவட்ட சுகாதார அதிகாரியின் அறிவுறுத்தலுடனும் பளைப் பிரதேச பொதுச் சுகாதார அதிகாரிகளின் அனுசரணையுடனும் பூச்சி இனஆய்வுக் குழுவினர், 'வருமுன் காப்பு' என்ற நடவடிக்கையை இப்பகுதியில் ஆரம்பித்துள்ளனர்.

இந் நடவடிக்கை மூலம், பாடசாலை மாணவர் மத்தியில் டெங்கு மற்றும் மலேரியா தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், இந்நோய் பரவலுக்கான ஏதுக்கள் அகற்றப்பட்டு வருகின்றன. (உ-10)

### மயானத்திற்கு தங்குமடம்

(அராலி)

அராலி வடக்கு வழுக்கையாற்று மயானத்திற்கு விரைவில் தங்குமடம் அமைக்கப் படவுள்ளது.

இதற்கான நிதியை சுழிபுரம் பிரதேசசபை வழங்கியுள்ளது. (உ-214)

## இராசி பலன்

29-10-2002
(ஐப்பசி 12, செவ்வாய்)
அட்டமி மாலை 5. 42 வரை
பூசம் பி. ப. 3.51 வரை
இராகுகாலம் - 3. 03- 4.33
நல்லநேரம்- 10 33 - 12.03
அட்டமி, நவமி

**மேடம்**
மனச்சோர்வு, முயற்சி தாமதம், கல்விச் சிறப்பு, அற்பர் உறவு

**இடபம்**
நல்ல முயற்சி, அன்னியர் சந்திப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தனவரவு

**மிதுனம்**
எதிர்பாராத நன்மை, மாதர் நட்பு, முயற்சி தாமதம், அதிக வார்த்தை

**கடகம்**
நல்ல உணவு கிடைத்தல், புதிய பொருள்சேர்க்கை, கற்பனை மிகுதி, ஜனவசியம்

**சிங்கம்**
பொருள் விரயம், காரிய அலைச்சல், சுரேகாதரர் உதவி, பிரயாணம்

**கன்னி**
நினைத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு,

**துலாம்**
தொழில் முன்னேற்றம், நல்ல செய்தி, முயற்சி கைகூடும், கற்பனை மிகுதி

**விருச்சிகம்**
புதிய சிந்தை, ஆன்றோர் மதிப்பு, உடல்நலக்குறைவு, கட்டுப்பாடு

**தனுசு**
காரிய தடங்கல், எதிர்பாராத மனஸ்தாபம், உடல் வியாதி, வாகன பயம்

**மகரம்**
நினைத்தகாரியம்கைகூடும், பொருள் சேர்க்கை, உறவினர் வருகை, பிரயாண நன்மை

**கும்பம்**
காரிய சித்தி, நிலைமாற்றம், சத்துரு ஜெயம், உடல் நலம்

**மீனம்**
உறவினர் மனஸ்தாபம், காரிய இடையூறு, தொழில் விரத்தி, தாழ்ந்த சுபாவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## தரம்-9 பொதுப் பரீட்சை

# வட- கிழக்கு மாகாணத்தில் 38,605 பேர் தோற்றுவர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் மாகாணப் பொதுப் பரீட்சை அடுத்த மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களையும் சேர்ந்த 38 ஆயிரத்து 605 மாணவர்கள் இப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

32 ஆயிரத்து 400 தமிழ் மொழிமூல மாணவர்களும், 6 ஆயிரத்து 205 சிங்கள மொழிமூல மாணவர்களும் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். (உ-8)

# ஜப்பான் அதிகாரிகள் கப்பூது விஜயம்

(துன்னாலை)

ஜே.ஏ ஐ சி ஏ.என்ற ஜப்பானிய நிறுவன அதிகாரிகள் கடந்த சனியன்று கப்பூது கிராமத்திற்குச் சென்று நியாப் செயல் திட்டம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியுள்ளனர்.

அத்துடன் இக் கிராமத்தில் வதியும் மக்கள் தொகை, யுத்த காலத்தில் இங்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த விபரங்களையும் இவ் அதிகாரிகள் திரட்டியுள்ளனர்.

இதேவேளை மேற்படி அதிகாரிகளிடம் இப்பகுதி மக்கள் தமது பகுதிக்கான வீதி, குளங்கள் புனரமைப்பு மற்றும் வீடமைப்பு தொடர்பான கோரிக்கையை முன்வைத்த போது, கரவெட்டி பிரதேச செயலகம் ஊடாக ஆக்கபூர்வநடவடிக்கைஎடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது, (உ-41)

# ஓய்வூதிய திணைக்கள கடமைகள் கைமாற்றம்

(கொழும்பு)

ஓய்வூதிய திணைக்களத்தினால் மேற் கொள்ளப்பட்டு வந்த ஓய்வூதியம் சம்பந்தமான சில நடவடிக்கைகளை, இனி அந்தந்ததிணைக்களங்களேமேற் கொள்ளவுள்ளதாக அரசாங்கநிர்வாக முகாமைத்துவ மறு சீரமைப்புஅமைச்சின் செயலாளர்டிரா விமல சிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்மாகாணசபைகளின்பிரதம செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கும் சுற்று நிருபம்அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்குவதில் ஏற்படும் கால தாமதங்களை கருத்தில் கொண்டே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (உ-8)

# அரச மருந்தகங்களை மீள இயக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

கடந்தகால யுத்தத்தினால் சேதம்அடைந்து செயற்படாதுள்ள அரச மருந்தகங்களை மீளஇயக்க நடவடிக்கை எடுக்குமாறுகோரி தென்மராட்சி பிரதேச மீளக்குடியமர்ந்தோர் சங்கத்தினர் மாகாணப் பிரதி சுகாதாரப் பணிப்பாளரிற்கு மகஜர்ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

சாவகச்சேரி, வரணி, கைதடி, ஆகிய இடங்களில் உள்ள மத்திய மருந்தகங்களை மீளஇயக்க உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு ஜி. ரி. சற் நிறுவனம் ஆயிரம் லீற்றர் நீர் கொள்ளக்கூடிய நீர்த்தாங்கிஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. (உ-10)

### கோயில் காணிகளை பகிர்ந்தளிக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில் காணிகளை அரசு சுவீகரித்து அக் காணிகளில் குடியிருப்பவர்களும் காணியற்ற ஏழைக் குடும்பங்களுக்கும் அவற்றைப் பகிர்ந்தளிக்க ஆவன செய்யுமாறு யாழ் மாநகரசபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரியைக் கோரியுள்ளார். (உ)

### மாணவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன பகல் நேர மற்றும் மாலை நேர கற்கை நெறி மாணவர்களை நாளைகாலை 9மணிக்கு நிறுவனத்தில்ஒன்று கூடுமாறு மாணவர் தலைவர் ம. றொபின்சன் கேட்டுள்ளார். (உ-6)

### உரிமைகளை பெறுவதாயின்

# மலையக தமிழ் மக்களும் அரசியல் ரீதியான

# போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்

## விடுதலைச் சிறுத்தை அணித் தலைவர் வற்புறுத்து

(கொழும்பு)

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், அம் மக்களின் வாழ்க்கைத்கர மேம்பாடு குறித்தும், இந்திய பாராளுமன்றம, மற்றும் சட்ட சபைகளில் பேசப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் தமிழக சட்ட சபை உறுப்பினருமான திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

ஹற்றன் இந்துமகா சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற கூட்டமொன்றில் பேசும் போதே திருமாவளவன் இதனைத் செரிவிக்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

வடக்கு- கிழக்கு பிரதேச தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை மாத்திரமே தமிழக மக்கள் முழுமையாக அறிந்திருக்கின்றனர்.

ஆனால், மலையக தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து தமிழக மக்களுக்கு தெரியாது. இதனை மலையகத்துக்கான விஜயத்தின் போது அறிந்து கொள்ள முடிந்தது.

மலையக மக்கள் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு விடயங்களில் பின் தங்கியுள்ளனர்;

இவர்கள் உரிமை பெற்று வாழ லேண்டுமானால், அரசியல் ரீதியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

ஈழப் போராட்டத்தின் அடிப்படை மலையக, தமிழ் மக்களின் வரலாற்றுப் பின்னணியில் இருந்தே ஆரம்பமாகியது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## தொற்று..

இந்நிலை சிறிது நேரமே நீடித்தால் பின்னர் சிறுநீரகம் சரிவர வேலை செய்யாது. இந்த நிலை நெடு நேரம் நீடிப்பதாயின் பேதி நின்ற பிறகும் கூடச் சிறுநீரகம் பணி புரியாது செயலற்றுப் போகக் கூடும்;

### பேதியும் வாந்தியும்

கொலரா தொற்றியதற்கு முதல் அறிகுறியாகத் தோன்றுவது கடுமையான பேதி தான். நோய் தோன்றி 24 மணிநேரம் கழிவதற்குள் இந்தப் பேதி தொடங்கி விடும். தொடர்ந்தும் பேதியிருக்கும். பேதியின் வேகமும் மிக அதிகமாக இருக்கும். பேதியைத் தொடர்ந்து வாந்தி வரும்; உடலில் நீர்ச் சத்தும், உப்புச் சத்தும் குறைந்து விடும்காரணத்தால் வயிற்றில் இறுக்கமான பிடிப்பு ஏற்பட்டு கடுமையான வலி இருக்கும். சிறுநீர் வெளியாவது குறைந்து விடும். ஒரே நாளில், நோயாளி எழுந்து நடமாடும் சக்தியற்றவனாகி விடுவான்; உடல் எலும்புக்கூடு போல் ஆகி விடும். நோயாளியைத் தூக்கி நிறுத்துவதோ, நடமாட வைப்பதோ கடினமாகிவிடும்;

தாகம் அதிகம் எடுக்கும்; நாவறண்டு விடும். தொண்டையும் வறண்டு போவதால், பேசுவதுங் கூட சிரமமாகிக் குரலே கூட எங்கோ அடித் தொண்டையில் மெதுவாகப் பேசுவது போலவே இருக்கும். உடல் தளர்ந்துள்ளதோடு சில்லிட்டுப் போகும். நிலை மேலும் மேலும் மோசமாகும் வேளையில், சுவாசமும்கெட்டு மூச்சு வாங்கும். அப்படியே இறந்து போகக் கூடும். பேதி நின்று விட்டாலும், சிறுநீர் நின்று போனால் பின்னர் சிறுநீரகம் வேலை செய்ய இயலாத காரணத்தாலும் சில நாட்களில் சிலர் இறந்து போகக் கூடும்.

தற்செயலாகவோ, அல்லது தீவிரமான சிகிச்சை காரணமாகவோ பேதியாவதும், வாந்தியாவதும் குறைந்து பின்னர் நின்று விட்டால், நோயாளியைத் தக்க சிகிச்சை மூலம் குணப்படுத்தி விடலாம். கொலரா நோய் வந்த பிறகு சிகிச்சை செய்து குணப்படுத்துவது கடினம். ஆகவே, அது வராமலே தடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளுதல் நல்லது. கொலரா நோய் ஊரில் இலேசாகத் தலை காட்டினால்கூட உடனே தடுப்பூசி போட்டுக் கொள்வது நல்லது. நாம் முன்னரே கூறியதுபோல காய்ச்சிஆறவைத்த தடிநீரைக் குடிக்க வேண்டும்; உணவைச் சூடாகவும், சுத்தமாகவும் உட்கொள்ள வேண்டும்.

### கொழும்புத்துறை ஆலயச் சூழலில்

# பௌத்த விகாரை அமைப்பு

# இந்து இளைஞர் மன்றம் அதிருப்தி

## அமைச்சர் மகேஸ்வரனிடமும் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு வதிரிப்பீட ஸ்ரீ மன்றுளாடும் விநாயகர் ஆலயச் சூழலில் பௌத்த விகாரை அமைக்கப்படுவதைக் கண்டித்து மேற்படி பகுதி இந்து இளைஞர் மன்றம், இந்து சமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது;

அக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது;

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமானதும்-ஆலய அர்ச்சகர் தங்கும் வீட்டுவளவு மற்றும் இளைஞர் மன்றக் கட்டடம் அமைநதுள்ளகாணியில், அப்பகுதியில் நிலை கொண்டுள்ள பாதுகாப்புப் படையினரால் பௌத்த விகாரை அமைக்கப்படுவது எமதுஇந்துமதத்தினை அவமதிக்கும் செயலாகவே நாம் கருதுகிறோம்.

இந்த விகாரை அமைப்பு தொடர்பாக எமது கண்டனத்தையும், அதிருப்தியையும் இந்து விவகார அமைச்சர் ஆகிய தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்;

மேலும், ஆலய உற்சவ தினங்களில் சுவாமி வீதியுலா வருவதற்கு ஆலயச் சுற்றாடலில் போடப்பட்டுள்ள வீதித் தடைகளும் அகற்றப்பட வேண்டும என்பதையும் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

எனவே யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்து விவகார அமைச்சர் என்ற வகையில், மேற்படி விகாரை அமைக்கும் செயற்பாட்டினை உடனடியாக நிறுத்தியும், ஆலயச் சுற்றாடலில நிலை கொண்டுள்ள படையினரை வேறு இடம் நகர்த்தியும்,

மன்றச் செயற்பாடுகளை உடன் ஆரம்பிக்க வசதியாக மன்றக் கட்டடத்தில் நிலை கொண்டுள்ள படையினரை வேறு இடம் நகர்த்தியும் உதவுமாறும் வேண்டுகின்றோம்.

இது உடனடியாக சாத்தியமாகாத பட்சத்தில் இந்து மதத்தவர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடும் சூழ் நிலை உருவாகலாம் என்பதனையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது; (உ)

## ஆரம்பக்கல்வி ஆசிரியர் வதிவிடக் கருத்தரங்கு

### சாந்திகத்தில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஜி.ரி சற். நிறுவனம் யாழ். பலகலைக் கழகம், சாந்திகம் ஆகியவற்றின அனுசரணையுடன் ஆரம்பக்கலவி ஆசிரியர்களுக்கான ஒரு மாத வதிவிடக கருத்தரங்கு நேற்று கச்சேரி நல்லூர் வீதியில் உளள சாந்திகம் உள வளத்துணை நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெற்ற இவ் ஆரம்ப நிகழ்வில், யாழ். பல்கலைக் கழக பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி சி.க. சிற்றம்பலம், புற நிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் சிவசந்திரன், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

சுமார் 50 ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் இக் கருத்தரங்கில் பங்கேற்றனர். இவர்களில் பெருமளவானவர்கள் வன்னிப்பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

'சிறுவர் உளநலம்'' ஆரம்பக்கல்வி ஆசிரியர் கைநூலும் நேற்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது,

பயிற்சி நெறி முடிவில் யாழ். பல்கலைக் கழகத்தினால், பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (உ)

### கட்டாக்காலி நாய்களால் தொல்லை

(கொக்குவில்)

கொக்குவில் சந்திப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளினால் அப்பகுதிகளில்அண்மைக்காலமாக வீதி விபத்துக்களும் அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (க-243)

### அதிபர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்விவலயஅதிபர்களுக்கான பாடசாலைமட்டக் கல்விஅபிவிருத்திதொடர்பான செயலமர்வு நாளை புதன்கிழமைபுலோலி மெ.மி.த.க. பாடசாலையிலும்நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் பயிற்சிநிலையத்திலும நடைபெறவுளளது. (உ)

### அல்பேனியாவில் மூவர் பலி

(பெல்கிரேற்)

கொசோவா அல்பேனிய மேயரும்,அவரது மெய்ப்பாது காவலர்கள் இருவரும் கட்சியாளர்களிற்கிடையில் ஏற்பட்டமோதலில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

யூகோஸ்லாவியாவின் ஐக்கிய நாடுகளின் கீழ் இயங்கி வந்த கொசோவா அல்பேனிய மேயரின் ஆதரவாளர்களிற்கும், எதிரணி ஆதரவாளர்களிற்கும் இடையிலேற்பட்ட மோதலை சமாதானப்செய்ய முயற்சித்த வேளையிலேயே மேயரும்,அவரது மெய்ப்பாது காவலர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது; (சு-2)

### குமுதினி படகு திருத்தம்

(காரைநகர்)

நெடுந்தீவு குறிகட்டுவான் சேவையில் ஈடுபட்டு பழுதடைந்த குமுதினிப்படகு ஊர்காவற்றுறை துறைமுகத்தில்வைத்துதிருத்தப்பட்டுவருகின்றது.

தென னிலங்கையில் இருந்து வீதிஅபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் குழு ஒன்று இதற்காக பிரத்தியேகமாக அழைக்கப்பட்டு இப்பழுது பார்க்கும்பணி நடைபெற்று வருகின்றது.

நவம்பர் மாதம் 1ஆம்திகதியளவில் பழுது பார்கும்பணி நிறைவு பெறறுவரும் எனவும் தற்போது கடல்மட்ட நீர் உயர்ந்திருப்பதனால் குமுதினிக் கப்பலின் அடிப்பாகம் செப்பனிட முடியாதுள்ளதாகவும் தெரிவிககப்படுகின்றது. (க-246,75)

### தமிழரை அடிமைப்படுத்தும் நோக்கம் கொண்ட

# பயங்கரவாத தடைச்சட்டத்தை சட்டப்

# புத்தகத்தினின்றும் முற்றாக நீக்கவேண்டும்

## விநாயகமூர்த்தி எம். பி. கோரிக்கை

(மட்டக்களப்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் உள்ளவரை தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை தொடர்ந்த வண்ணமே இருக்கும். தமிழ் மக்களை அடிமைப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட அச்சட்டத்தை சட்டப் புத்தகத்திலிருந்து முற்றாக நீக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கித் தமிழ் அரசியல் கைதிகளைப் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்;

மேலும அவர் கருத்து தெரிவிக்கையில்;

தனிஈழத்திற்கான மக்கள் ஆணையைப் பெற்று எதிர்க் கட்சியாக பாராளுமன்றத்தில் அமர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக குரலெழுப்பாததுடன், அதற்கு எதிராக வாக்களிக்காமல் விட்டமை துரதிஷ்ர்ட வசமானதே என்றும் கவலை வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து அங்கு உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான யோசப் பரராஜசிங்கம், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் பொருட்டு தமிழ்மக்களைப் பாதிக்காத வகையில் ஒரு வருடத்திற்கு மட்டுமே பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுல் படுத்தப்படும் என்ற வாக்குறுதியை நம்பியே தமிழர் விடுதலைக் கூட்டணி அச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்கவில்லை என்று கூறினார். (த)

# BOXER

## கண்கவர் தோற்றம், சிக்கனம் மற்றும் உயர் தொழில்நுட்பத்தில் என்றும் முன்னணியில்

இன்றைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள உங்களுக்கான சிறந்த முதலீடு BOXER

நம்பிக்கை மற்றும் தரத்திற்கு பெயர் போன நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்படும் BOXER உங்கள் தெரிவிற்கேற்ற மோட்டார் சைக்கிளாக இருப்பதால் மேலும் சிறந்த வளம் மிக்க எதிர் காலத்திற்கு இதிலே சவாரி செய்யுங்கள்.




- சக்திவாய்ந்த 4ஸ்ட்ரோக் 100CC என்ஜின் . நிலைக்குத்தான அமைவு மேலும் சிறந்த ஓட்டத்துக்கு RACE உயர்தொழில்நுட்பத்துடன்,
- லீட்டருக்கு 87 கி.மீ. நியம - பரீட்சை நிபந்தனைகளின் கீழ்
- கரடு முரடான பாதைப் பயணத்துக்கு உறுதிவாய்ந்த வலுப்படுத்தப்பட்ட டபிள் கிரேமல் அமச்சட்டகம்
- பாதுகாப்பான சவாரிக்கு சக்திவாய்ந்த 35/35W முன் விளக்கு

Boxer இப்பொழுது AT, CT மற்றும் CT Deluxe மாதிரிகளில்.

**பஜாஜ்** பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2 தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 687175, 074-700677 ஹொட்லைன் : 074-715050

**விசாரணைகள்:** குறிஞ்சி டிரேடர்ஸ், 75 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0777 - 626919

குறிஞ்சி டிரேடர்ஸ், 6, நவீன சந்தை, சாவகச்சேரி, தொலைபேசி : 0777 - 626919

## இரண்டாம் கட்டப் பேச்சு 31இல் ஆரம்பம்

# அரச தரப்பு ஆலோசகர்கள் இன்று தாய்லாந்து பயணம்

## புலிகள் தரப்பு புதனன்று செல்ல ஏற்பாடு

(கொழும்பு)

**தாய்லாந்தில் இடம்பெறவுள்ள அரசு- புலிகள் இரண்டாம் கட்டச் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் அரசு தரப்புப் பிரதிநிதிகள் இன்று காலை தாய்லாந்து பயணமாகவுள்ளனர்.**

இதேவேளை பேச்சுக்களில் கலந்து கொள்ளும்அரசு தரப்புப் பிரதிநிதிகளான பேராசிரியர் ஜி எல் பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட, அமைச்சர் ரவூப்ஹக்கீம், சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட்குணதிலக மற்றும் ஆலோசகர்களாகப்பங்கேறகவுள்ள மேஜர் ஜெனரல் சாந்தகொட்டேகொட, சமாதானச் செயலகப் பிரதிநிதிகள் ஜெயன்குணரத்ன, சானக ஜெயசேகர ஆகியோரை பிரதமர் நேற்று மாலை சந்தித்ததாகவும்,

இச் சந்திப்பில், அரசு- புலிகள் கூட்டுச் செயலணி, அதன் கட்டமைப்புஅதிகாரப் பகிர்வு ஆகியன பற்றிப் பேச வேண்டியன குறித்தும்,

கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக் குறித்து ஆராய வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் பிரதமர் அறிவுறுத்தல்களை வழங்கியதாகவும் தெரிய வருகிறது.

அரச தரப்பு ஆலோசகர்களாகப் பங்கேற்கவுள்ளவர்கள் மாத்திரமே இன்று தாய்லாந்து புறப்படவுள்ளதாகவும் முதற் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொண்ட அரசு தரப்பு பிரதிநிதிகள் நாளைய தினமே அங்கு புறப்படுவர் எனவும் அறியப்படுகிறது.

இது இவ்விதமிருக்க, விடுதலைப் புலிகள் தரப்பில் பேச்சுக்களில் பங்கேற்கவுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் புனர் வாழ்வு நிபுணர் ஜோர்ஜ் மகேஸ்வரன், சட்ட நிபுணர் உருத்திரகுமார். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி கேணல் கருணா ஆகியோரை நாளை விசேட உலங்கு வானூர்தி மூலம் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், தூதரக அதிகாரி தோமஸ் ஸ்ராங்கிளின் ஆகியோர் பாதுகாப்பாக கட்டுநாயக்கா விமான நிலையத்தின் ஊடாக தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லவுள்ளதாக நோர்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மறைஞான இலக்கியம் ஓர் அறிமுகம் எனும் தலைப்பில் யாழ் பல்கலைக் கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று பி.ப 2மணிக்கு தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி மோசசு மைக்கல் பாரடே கருத்துரை வழங்கவுள்ளார். (ந-த-5)

## கைத் தொலைபேசியால் மூளை சுறுசுறுப்படைகிறது

### ஆய்வு மூலம் கண்டுபிடிப்பு

இன்றைய தொடர்பாடல் உலகில் பலநாட்டு மக்களாலும் பயன்படுத்தப்படும்கையடக்கத்தொலைபேசியின்பயன்பாட்டால் மூளை நன்கு சுறுசுறுப்படைந்து செயற்படுகின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கையடக்கதொலைபேசியை காதில் வைத்து பேசும் போது வெளியாகும் றேடியோக்கதிர்களின் வெப்பம் மூளைக்குச் சென்று மூளையின் செயற்பாடுகளைச் சுறுசுறுப்படைய செய்யும் என்று கொலன்றபல் கலைக்கழகம் ஆய்வு ஒன்றின் மூலம் கண்டு பிடித்துள்ளது. (சு-2)

# எமது மனச்சாட்சி ஆண்டவனின் குரல் என்பதை உணர்ந்து கடமையைச் செய்ய வேண்டும்

## யாழ் மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா

(தென்மராட்சி)

எமது மனச்சாட்சி ஆண்டவனின் குரல் என்பதை உணர்ந்து சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் கடமையைச் செய்வோமாக இருந்தால்நிச்சயமாக எமது எதிர்காலம் விழிப்புணர்ச்சியுள்ள கலாசாரத்தின் விழுமியங்களைப் பூரணப்படுத்தக் கூடியதானதாக உருவாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரீ. விக்னராஜா மானிப்பாயில் நேற்று இடம் பெற்ற பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் மனித மேம்பாட்டுக் கல்விக்கான பாடசாலைதிறப்புவிழாவில்சிறப்பு அதிதியாகப் பங்கு கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

இலங்கைக்கான மத்திய இணைப்பாளர் ஸ்ரீ.எம். வன்னியசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் புனரமைக்கப்பட்ட சாயி லக்சுமி மண்டபம் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டித் திறக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பகவான் சத்திய சாயிபாபாவின் இலங்கைக்கான முதல் பாடசாலையின் மாணவர்கள்மூவர் அனுமதிக்கப்பட்டனர்.

மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜாஅங்குதொடர்ந்து உரையாற்றும் போது.

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் பெயரில் உருவாகின்ற பாடசாலை எமது சமுதாயத்தின் தமிழ்ப்பண்பாட்டை, தமிழ்க்கலாசாரத்தை தெளிவுபடுத்தி எதிர்காலச் சிறுவர்களை உருவாக்கும் சீரிய பணியை மேற்கொள்வதுடன்,கடமை வழி நின்று அன்பினை வலியுறுத்தி அகங்காரத்தை ஒழித்து தெளிந்தமனப்பான்மையுடன் வாழச் செய்ய வேண்டும்.

கீழைத்தேசங்களில் சட்டம் என்பது சமயத்தின்,ஆத்மீகத்தின் வெளிப்பாடாகும். தமிழர்கள் கண்டதேசவழமைக் கட்டத்தில் இன்னுமொருவரை நிந்திப்பதோ இன்னுமொருவரைப் பேசுவதாக எண்ணுவதோ குற்றமாகும். மேலைத் தேயச்சட்டம் உரிமையை வலியுறுத்துகின்றது. கீழைத் தேயச சட்டம்கடமையைவலியுறுத்துகின்றது.

எனவே நாம் எவ்வளவு பாடசாலைகளை உருவாக்கினாலும்,எவ்வளவு போதனைகளைச் செய்தாலும் எமது சமுதாயத்தில் எமது கலாசாரத்தையும் விழுமியங்களையும் பரந்த மனப்பான்மையுடன் நடுநிலைநின்றுவளர்க்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம் (நந்தி), பேராசிரியர்சுனந்த தெகாம் பொட, உட்பட வேறும் பலர் உரையாற்றினர்.

சிறுவர்களின் கலை நிகழ்சிகளும் இடம் பெற்றன. வட பிராந்தியத் தலைவர் ஸ்ரீ. ரீ. வசந்தசேனன் நன்றியுரை கூறினார். (உ-77)

## காஞ்சிரங்குடா சம்பவம் விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

காஞ்சிரங் குடாவிசேட அதிரடிப்படை முகாமுக்கு அருகே இடம் பெற்ற மனிதப் படுகொலைகள் தொடர்பான நீதிமன்ற விசாரணை அடுத்த மாதம் 13 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப்படுகொலைகள்தொடர்பான விசாரணைகள் அக்கரைப்பற்றுநீதிமன்றத்தில்நீதிவான் எம்.வை.எம் இஸ்ஸதீன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட இருந்தது.

அக்கரைப் பற்று நீதிவான் விடுமுறையில் சென்ற காரணத்தாலேயே இவ் வழக்கு விசாரணைகள் பிற் போடப்பட்டுள்ளதாக பதில் நீதிவான் எஸ்.ஜெகநாதன் நேற்று நீதிமன்றத்தில் அறிவித்துத்துள்ளார்.

நேற்று நடைபெற விருந்த வழக்கில்சாட்சியமளிக்கவென 7 பேர் சமுகமளித்திருந்தனர்.

உயிரிழந்தவர்களின் சார்பாக மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்டத்தரணி கே. எஸ். இரத்தினவேல் நேற்று ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## அடிப்படை வசதியையாவது ஏற்படுத்துக உயர் தொழில் நுட்ப நிறுவன

# மாணவர் நாளை நகரில் பேரணி

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர்கள், தமது நிறுவனத்திற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை இதுவரை அமைக்காமல் சம்பந்தப்பட்ட தரப்புகள் காட்டும் அசமந்தப் போக்கைக் கண்டித்தும், கட்டடம் அமைப்பு மற்று வசதிகள் மேம்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தியும் நாளை யாழ் நகரில் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில், மாணவர் ஒன்றியத்தினால் நேற்று நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பில் இது குறித்த திட்டவட்டமான அறிவிப்பு வெளியானது.

மாணவர் ஒன்றியத் தலைவர் ம. றொபின்சன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில்,

1998 ஆம் ஆண்டு முதல் தனியார் காணி ஒன்றில் உரிய கட்டட வசதியோ, அடிப்படை வசதியோ அற்ற நிலையில் யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனம் இயங்கி வருகின்றது.

ஜி. ரி. சற். நிறுவனமானது இரு மலசல கூடங்களை அமைத்துத்தர முன்வந்த போதும், சொந்தக் காணி இல்லை என்ற காரணத்தினால் அந்தப்பணி பின்தள்ளிச் செல்கின்றது.

இங்கு 800 மாணவர்கள் வரை கல்வி கற்கின்ற போதிலும் மேலதிக கற்கைச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளது.

தவிரவும் தென்பகுதி உயர் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளிலும் ஒருபகுதியாவது எமக்கு வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

நாளைய தினம் காலை 9.00 மணியளவில் பேரணி ஆரம்பமாகி ஆரியகுளம் சந்தி ஆஸ்பத்திரி வீதியூடாக கண்டி வீதியால் சென்று யாழ். செயலகத்தை அடையவுள்ளது.

அங்கு வைத்து யாழ். அரச அதிபரூடாக பிரதமர். ரணில் விக்கிரமசிங்கவிற்கு இது குறித்த மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது.

அதன் பிரதிகள், உயர் கல்வி அமைச்சர், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோரிடமும் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## ★ காஞ்சிரங்குடாபடுகொலை விசாரணைகளை நடத்த மற்றோர் குழு நியமனம்

(கொழும்பு)

அம்பாறை காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாம் அருகே ஏழு பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை விசாரணை செய்வதற்கு கொழும்பிலிருந்து மற்றொரு குழு அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

காஞ்சிரங்குடா பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பான விசாரணைகளை உள்துறை அமைச்சின் செயலாளர் எம் என். யூனைட் தலைமையில் அமைக்கப்பட்ட சுயாதீன குழுவொன்று அண்மையில் மேற்கொண்டது.

ஆனால் இச்சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்ததையடுத்தே மற்றொரு குழு அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாநாளைகாலை 9.30மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்அரச அதிபர் செ. பத்மநாதன் பிரதம விருந்தினராகவும் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்டவிரிவுரையாளர் ப கணேசலிங்கம் நல்லூர் பிரதேசசெயலர் ந.வேதநாயகன் ஆகியோர்

(2-ம் பக்கம் பார்க்க)

பகைஎன்னும் பண்பிலதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று.

குறள்

வலம்புரி

## சமாதானம் என்பது---

யுத்தம் என்பது மனங்களில் ஏற்படுகிறது என யுனிசெவ் மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவு கூறியுள்ளது. மனிதர்களின் மன நிலையிலேயே யுத்தமும் சமாதானமும் தங்கியுள்ளது

ஒருவன் மற்றவனை அடக்கும் போது, தான் அடக்கப்படுவதானஉணர்வை உணர்கின்ற நிலையில் அங்கு முரண்பாடு ஏற்படுகின்றது.இம்முரண்பாடு நீக்கப்படுவதாயின் 'அடக்கு முறை' என்ற உணர்வு மனப்பதிவிலிருந்து விலக்கப்பட வேண்டும். இதுவே முரண்பாட்டிற்குத் தீர்வாகிறது.இத்தகையதொரு பொருத்தப்பாடே இலங்கை இனப்பிரச்சினையிலும் உள்ளது.

சிங்கள ஆட்சியாளர்கள் தம்மை அடக்குகிறார்கள் என்ற யதார்த்தமான உள்ளப்பதிவு தமிழ் மக்களிடம் ஆழமாகப் பதிந்து விட்டது. இதிலிருந்து அவர்களை மீட்பதாயின் அடக்குமுறை என்றபதம் தமிழர்களின் ஆழ் மனதிலிருந்து அகற்றப்பட வேண்டும்.

தாய்லாந்தில் எதைத்தான் பேசினாலும் தமிழினத்தை அடிமைப்படுத்துவதும், ஆக்கிரமிப்பதும் தான் சிங்கள ஆட்சியாளர்களின் தொழில் என்ற உணர் நிலை ஒவ்வொரு தமிழ் மகனிடமிருந்தும் அகற்றப்பட வேண்டும்.

அரசும்- விடுதலைப் புலிகளும் தாய்லாந்தில் பேசி எடுக்கப்படுகின்ற தீர்மானம் இப்போதிருக்கின்ற சூழ் நிலையையைச் சமாளிப்பதாக மட்டும் இருந்துவிடக் கூடாது.

எதிர்காலச் சந்ததியும் அத் தீர்மானத்தின் மூலம் நாம் இலங்கைத் தேசத்தில் சுதந்திரமாக வாழ்கின்றோம். எமது தேசம் இலங்கை என்ற உணர்திறனைப் பெறக்கூடியதாக அமைதல்வேண்டும்.

இவற்றுக்கு மேலாக சமாதானம் என்பது ஆயுதத் தரப்பினரிடம் மட்டும் ஏற்படும் அமைதி நிலை எனக் கருதிவிடலாகாது.

அவ்வாறு கருதப்படுமாயின் இலங்கையில் எதிர்காலத்தில் பிரிவினை கோரும் அமைப்புகள் உருவாகும் வாய்ப்புஏற்படும். இத்தகையதொரு துரதிஷ்ட நிலை தொடராமல்இருக்கவேண்டுமாயின் சகல விதத்திலும் சமாதான உணர்வு ஏற்படுவதோடு, அச்சமாதானம் சகலரையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

# தொற்றுநோய்களில் ஆபத்தான வாந்திபேதி
# வராமல் தடுப்பதற்கு வழிவகைகள் பலவுண்டு

## மருத்துவ விளக்கம்

ஷண்முகானந்தா

தொற்றுநோய்கள் எப்படி ஏற்படுகின்றன? அதன் காரணம் யாது? தொற்று நோய்களால் ஏற்படும் விளைவுகள்என் னென்ன? போன்ற விபரங்களையும், அவற்றை முன்னெச்சரிக்கையாகத் தவிர்ப்பதற்கும், உடனடியாக மேற்கொள்ள வேண்டிய சிகிச்சை முறைகளையும் விபரிக்கிறது இக்கட்டுரை.

தொற்றுநோய்க்கும்,மற்ற நோய்க்குமிடையே பெரிய வேறுபாடு உண்டு. பொதுவாக இருதய நோய், நீரிழிவு போன்ற பெரிய நோய்கள் மனிதனை மெதுவாகப்பற்றி அவனுக்குப்பல எச்சரிக்கைகளைத் தந்து சிலகாலம் சென்ற பிறகே அவை தீவிரம் அடைந்து, மனிதனுடைய உயிருக்கு ஆபத்தைவிளைவிக்கின்றன. ஆனால் கொலரா போன்றகடுமையானதொற்று நோய்களோ தொற்றிய ஒரு சில மணிகளிலேயே மனித உயிரை மாய்க்கும் அளவுக்குத் தீவிரம் அடைந்து விடுகின்றன. சாதாரண பிணிகளுக்கு நிதானமாக அவசரப்படாமல் கூட சிகிச்சை மேற்கொள்ளலாம். ஆனால்தொற்றுநோய் ஏற்பட்டு விட்டால்மிகத்துரிதமாக அதற்குச் சிகிச்சை அளித்தாலொழிய உயிரைக் காப்பாற்ற முடியாது.

நமது மக்களுக்குத் தொற்று நோய்களைப் பற்றிச் சரியான அறிவும், தெளிவும் இல்லாததனாலேயே வெகு எளிதாகத் தொற்று நோய்க்கு இலக்காகிறார்கள். அதிக அளவிலும் மரணம் ஏற்படுகிறது. ஆகவே தொற்று நோய்களைப் பற்றி எளிய முறையில் தெளிவாக விளக்கம் தரும் வகையில் சில விஷயங்களைச் சொல்லுகிறோம்.

### நோய்த் தொற்று எவ்வாறு ஏற்படுகிறது?

தொற்றுநோய்கள்தோன்றுவதற்கு ஆதாரமாக இருப்பவை பலவிதமான நுண்ணிய நோய்க் கிருமிகளே! இந்த நோய்க் கிருமிகள் பல வழிகளைப் பின்பற்றி உடலுக்குள் புகுந்து நோய்களைஉண்டாக்குகின்றன. சில நோய்க் கிருமிகள் உடல் சருமத்தின் வழியாக உடலுக்குள புகுவதுண்டு. இவை நேரடியாக உடலுககுள் பிரவேசிப்பதில்லை. உடலுக்குள் பிரவேசிக்க வழி கிடைக்குமா என்று சருமத்தின் மீதுஅமர்ந்துஇவை காத்துக் கொண்டிருக்கும சருமத்தில் அடிபட்டுப் புண்ஏற்பட்டாலும், ஒருபொருள் சருமத்தில் உராய்வதினால் ஏற்படும் கீறல்மூலமும், கொசு மூட்டைப் பூச்சி போன்றவை கடிப்பதனாலும் ஏற்படும்வழிகளைப் பயன்படுத்திக் கொண்டு தொற்று நோய்க் கிருமிகள் உடலுக்குள் ஊடுருவி விடுகின்றன.

நாம் சுவாசிக்கும் போதும் மூக்குவழியாகச் சில கிருமிகள் சுவாசப்பாதையை அடைந்தும், நுரையீரல் போன்ற சுவாச உறுப்புளைச் சேர்ந்தும் நோய்களை உண்டாக்கி விடக்கூடும். மூக்கின் வழியாக நோய்க் கிருமிகள் உட் செல்லாவண்ணம் பல தடுப்பு ஏற்பாடுகள் இயற்கையாகவே மூக்கினுள் அமைந்திருக்கின்றன. என்றாலும் கூட நோயாளிகளான சிலர் நமக்கு மிகவும் அருகாமையில் இருந்து தும்மும் போதும், இருமும் போதும் நோய்க்கிருமிகள் அவர்களிடமிருந்து மிக வேகமாக வெளியேறி நாம் சுவாசிக்கும் காற்று வழியாக- மூக்குவழியாக உள்ளேசென்று விடுகின்றன.

சில தொற்றுநோய்க் கிருமிகள் உணவு மூலமும், குடிநீர் மூலமும் உடலுக்குள் சென்று விடுவதுண்டு.

(டைபாய்டு எனப்படும்) நெருப்புக்காய்ச்சல்,சீதபேதி, வாந்திபேதி (கொலரா) போன்ற நோய்களைத் தோற்றுவிக்கும் கிருமிகள் இவ்வாறு தான் உள்ளே செல்கின்றன. வைரஸ்,காமாலை, இளம்பிள்ளை வாத நோய் போன்றவைகூட உணவு, குடிநீர் ஆகியவற்றின் மூலம்தான் பரவுகின்றன.

சொறி, சிரங்கு போன்ற வியாதிகள் அந்த வியாதிக்கு உரியவரின் உடைகளை மற்றவர்கள் தொட்டுக் கையாளும் போதும், நாய்க் கடியினால் ஏற்படக் கூடிய நோய். நாய் மனிதனைக் கடிக்கும் போது ஏற்படும் காயம்வழியாக நோய்க் கிருமிகள் உட்செல்வதினாலும் ஏற்படுகின்றன. மூளைக் காய்ச்சல்நோய் பன்றிகள் மூலம் மற்றவர்களுககுத் தொற்றுகிறது. மலேரியா நோய் கொசுக்கள் கடிப்பதால் ஏற்படுகிறது. டைபாய்டு, சீதபோதி போன்றவை ஈக்கல் மூலம் பரவுகின்றன.

மக்கள் மேலோட்டமான இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு, தொற்றுநோய்ப் பற்று ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நோய் ஏற்பட்ட பிறகு சிகிச்சைமேற் கொள்வதைவிட நோய்வராமலேயே தடுப்பது தான் நல்லதாகும். உணவையும், குடிநீரையும்தூய்மையான முறையில் உண்ணப் பழகிக் கொண்டால்பல தொற்று நோய்களைத் தவிர்த்துவிடலாம்.

பல கடுமையான தொற்று நோய்களுக்குத் தூய்மையில்லாத நீரை அருந்துவது முதன்மையான காரணமாக அமைக்கின்றது. கொலரா, சீதபேதி போன்றவைகளுக்குக் குடிநீர் முக்கிய காரணமாக இருப்பதால், குடிநீரைக் காய்ச்சி வடிகட்டி ஆறவைத்துக் குடிப்பதன் மூலம், பல தொற்று நோய்களிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

நமது வீட்டுக்கு அருகாமையில் கொசுக்களும், ஈக்களும் இல்லாத சூழ் நிலையை அமைத்துக் கொண்டால், மலேரியா போன்ற பெரிய நோய்கள் வராமல் தவிர்த்து விடலாம். இந்த ஆலோசனைகளைப் பின்பற்றி நோய் வராமலே தடுக்கும் நடவடிக்கைகளை மக்கள் மேற்கொள்ள வேண்டும்.

### கொலரா

தொற்று நோய்களிலேயே மிகவும், கடுமையானதும், அபாய கரமானதும் கொலரா என்னும் வாந்திபேதி நோயாகும். இந்த நோய் கண்டவர்களைக் குணமாக்குவது என்பது எமன் வாயிலிருந்து அவர்களை மீட்டு வருவதற்கு ஒப்பாகும். தொடக்கத்திலேயே தீவிரமான சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால், ஒரு சில மணி நேரங்களிலேயே நோயாளி மரணமடைந்து விடுவது உறுதி. கொலரா நோய் முன்னரே நாம் குறிப்பிட்டது போலத் தூய்மையற்ற குடி நீரினால் தான் குறிப்பாக ஏற்படுகின்றது. இந்த நோய் ஒருவருக்குத் தொற்றினால் அடுத்தடுத்து அருகாமையில் இருக்கும் எல்லோரையுமே தொற்றிக் கொள்ளும்.

மிக நுண்ணிய இந்த நோய்க் கிருமி சுற்று வளைந்த மாதிரி இருக்கும். இந்தக் கிருமிகள் நோயாளியின் மலத்தின் வழியிலும், வாந்தியின் வழியிலும் அதிக அளவில் வெளிப்படுகின்றன. தண்ணீர், பால், உணவுவகைகள் போன்றவற்றைத் தூய்மையாகக் கையாளாத யாருக்குமே இந்த நோய் எளிதாகப் பற்றி விடும். கடுமையாக மழை பெய்யும் காலங்களில், மழை நீர் தரையிலிருக்கும் அசுத்தங்களையெல்லாம் கரைத்துக்கொண்டு சென்று நீர் நிலைகளில் சேர்த்து விடுகிறது. தரையில் நன்றாக ஊறி, கிணற்று நீரிலும் இந்த அசுத்தங்கள் கலந்து விடுகின்றன.

இந்நீரை அப்படியே அருந்தும் போது நிச்சயம் கொலரா நோய் ஏற்படும். பெருந்திரளாகக் கோயில் திருவிழா போன்ற இடங்களில மக்கள் கூடுகிறார்கள். அவ்வாறு கூடுகின்ற மக்கள் சுற்றுப் புற சூழ் நிலையை அசுத்தப்படுத்துவதும், கிடைக்கும் உணவு, தண்ணீர் போன்றவற்றை உட்கொள்வதும் மிக எளிதாகக்கொலராநோய் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்து விடுகிறது. மழைக் காலம் போன்ற நாட்களில் உணவு தயார் செய்வதிலும், அதை உண்ணுவதிலும், தூய்மையான நடைமுறையைக் கையாள வேண்டும். உணவைச் சூடாகவே சாப்பிட்டு விட வேண்டும்.

நன்றாகக் கொதிக்கவைத்து வடிகட்டி ஆறிய குடிநீரைத் தான் கட்டாயம் அருந்த வேண்டும். வீட்டின்சுற்றுப் புறத்தில் திறந்த வெளியில் குழந்தைகளை மலம் கழிக்க வைப்பது, பெரியவர்களும் மலம் கழிப்பது போன்ற பழக்கத்தை நிறுத்தியாக வேண்டும். கழிப்பிட வசதியில்லாதவர்கள ஐந்து அல்லது ஆறடிக்குக் குறையாத குழிகளை வெட்டி மலம் கழித்த பிறகு கொஞ்சம் மண்ணைப் போட்டு மூடிச் சுண்ணாம்புத் தூள் போன்றவற்றைத் தூவி விட வேண்டும்.

### உப்பு நீர் குறைவால் கேடுகள் விளையும்

தொற்றிய சிலமணி நேரத்திலேயே இந்நோயின் அறிகுறிகள் தெரியும். அவ்வளவு விரைவாக இக் கிருமிகள் குடலில் வளர்ந்து, அவற்றிலிருந்து வெளிப்படும விஷப்பொருள் குடலைப் பாதித்து அவற்றை வேகமாக நீர் கசிய வைக்கின்றது. சாதாரணமாகக் குடலிலிருந்தே பெரும் பகுதியான உணவுப் பொருள் இரத்தத்தில் சென்று கலக்க வேண்டும் ஆனால் இந்த நிலையில் இரத்தத்திலிருந்து நீரும், உப்பும வேகமாகக குடலுக்குள் கொட்டி விடுகின்றன. இவ்வாறு கொட்டிப் போன உப்பு நீர் வேகமாக உடலை விட்டு வெளிப்படுகிறது.

இரத்தத்தில் உப்பு நீர் வேகமாகக குறைந்த காரணத்தால் பல கேடுகள் விளையக் கூடும்(1)வயிற்றுச்சதைபிடித்துக கொண்டு வயிறு மிகவும் வலிக்கும்(2)இரத்த அழுத்தம் குறைந்து இருதயம் சரிவர இயங்க இயலாது. ஆபத்தாகி விடும. (3) சிறுநீரகத்திற்கு இரத்தம போதிய அளவு வருவதில்லையாதலால் கெட்ட பொருட்களை நீக்க அதனால் இயலுவதில்லை. சிறுநீர் வெளிபபடுவதும் நின்றுவிடக் கூடும்.

(6-ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### மதங்களின் கருத்தும் சாரமும்

ஒரே ஒரு மதந்தான் இருக்கிறது, அது அன்பாகிய மதம், நம்பிக்கையாகிய மதம், புலனறிவாகிய மதம், உண்மை ஒன்றே, முனிவர்கள் இதை வேறு விதமாக அழைத்தார்கள் வெறுமனே படிப்பதாலோ, கற்றுக் கொள்வதாலோ சொற் பொழிவாற்றுவதாலோ, உண்மையை அறிய முடியாது. அதைச் செயல்கள் மூலம் தேடுபவர்களாலேயே உணர முடியும் சுயநலம் அற்ற தொண்டு மற்றும் சாதனையின் மூலமாகப் பயிற்சி செய்து அதன் வழியாக நீங்கள் ஆன்ம வீரர்களாக வேண்டும்எல்லாமதங்களின்கருத்தும் சாரமும் ''நல்லவனாயிரு;நல்லவைகளைச் செய்'என்ற நான்கு சொற்கள் தாம்.

சுவாமி சிவானந்தர்

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின்

# கட்டுமானப் பணிக்கு எதிரான வழக்குத் தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பகுதியில் அமைக்கப்ட்டு வரும் யாழ்பாணம் தேசிய கல்வியற் கல்லூரிக்கான கட்ட கட்டுமானப் பணிகளை இடை நிறுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மேற்படி காணி பின்னர் அரசினால் சுவீகரிப்புச் செய்யப்பட்டது.

காணி சுவீகரிக்கப்படுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியான போது அது குறித்து வழக்காளி உரிய நேரத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ் வழக்கில் எதிராளிகள் அரச ஊழியராக இருப்பதால் குடியியல் வழக்கைத் தாக்கல் செய்வதற்கு முன்னர் சட்டமாதிபருக்கு ஒரு மாதா கால அறிவித்தல் வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனவும்,

போதிய கால அவகாசம் இருந்தும் குடியியல் நடை முறைச் சட்டகோவைக்கு முரணாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் சுட்டிக் காட்டிய நீதிபதி இ.த.விக்கினராஜா வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

இதேவேளை வழக்கிற்கான செலவுகளை வழக்காளியைச் செலுதுமாறும் நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (த)

---

### எழுவை....

வி.இரதினவேலு,(வயது45), வி.சரவணன் (வயது22),வி.முருகனவேலவன் (வயது23),கே.அஞ்சப்பன்(வயது25), என்.விஜயபாலன் (வயது 25), ஏ.குப்புசாமி (வயது21),எல்.பானபுயன்(வயது24), வி.தமிழரசன் (வயது31), கே.நாகமுத்து (வயது19), பி.ஏழுமலை (வயது46),எஸ்.ராஜீவகாந்தி (வயது20) எஸ்.காந்தி (வயது 25), கே.தமிழரப்பன் (வயது20).

தடுத்து வைக்கப் பட்டுள்ள இந்திய மீனவர்கள் 16 பேரையும் கடற்படை அதிகாரிகள் சென்று பார்வையிட்டுள்ளனர்.

(ந-75,246)

---

### அரச பிரதிநிதி...

ரணில் விக்கிரமசிங்கா இரண்டாம கட்டப் பேச்சுவார்த்தையில் முக்கியமாகப் பேசப்படவுள்ள கூட்டுச் செயலணி ,உயர் பாதுகாப்பு வலைய மீள் குடியேற்றம் தொடர்பான ஆலோசனைகளை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

### பிரதமர்..

எமது நடவடிக்கைகள் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு உட்பட்டவையேயாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள ஈ.பி.டி.பிக்கட்சியினருக்கோ அல்லது வேறு தமிழ்க் குழுவினருக்கோ விரோதிகள் அல்ல.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என பது எனது இலட்சியமாகும்.

மக்கள் விடுதலை முன்னணியைப் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் பேசுவதால் மட்டுமே தீர்வு கிடைக்கும் என்பது எமது நிலைப்பாடாகும் எனவும் அவர் தெரிவித்தார். (உ-8)

### இராணுவச்....

சக இராணுவத்தினரின் துன்புறுத்தல்களைத் தாங்க முடியாமல மனவிரக்தி அடைந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிபபாய் இராணுவ முகாமிலிருந்து தப்பியோடி யாழ்.நகரை வந்தடைந்தேன். அன்றிரவு யாழ். நகரிலுள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்தேன்.

பின்னர் நேற்றுக்காலை தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் சரணடைந்தேன். இராணுவத்தில் இணைந்து செயற்படுவதற்கு எனக்கு அறவே விருப்பமில்லை. விடுதலைப்புலிகள என்னை வீட்டுக்கு அனுப்பி வைபபார்கள் என்ற நம்பிக்கையிலேயே அவர்களிடம் சரணடைந்துள்ளேன. இராணுவத்தில் சேரும்போது எனக்கு 15 வயது. போலியான பிறப்புச் சான்றிதழைப் பயன்படுத்தியே இராணுவத்தில் சேர்ந்தேன். இராணுவத்தினரின் துன்புறுத்தல்களைத் தாங்க முடியாமல் என்னைப் போன்ற பல இராணுவத்தினர் முகாம்களில் அவஸ்தைப்படுகின்றனர் என அந்த இராணுவச் சிப்பாய் தனது அவல நிலையை தெரிவித்தார்.

சரணடைந்த சிப்பாய் விடுதலைப புலிகளின் யாழ். மாவட்ட அரசியல துறை அலுவலகத்தில் வைத்து யாழ் மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒலே பிரண்டாமனிடம் முதலில் ஒப்படைக்கப்பட்டார்.

ஒப்படைக்கப்பட்ட இராணுவச் சிப்பாயைத் தாம் மீண்டும் இராணுவத்தினரிடமே ஒப்படைக்க முடியும் எனவும் ஒப்படைக்கப்படும இராணுவச் சிப்பாய்க்கு எந்தவித அசம்பாவிதங்களும் ஏற்படாமல் பார்த்துககொள்ள முடியுமெனவும் கண்காணிப்புக்குழுத் தலைவர் கூறினார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த பிரஸ்தாப இராணுவச் சிப்பாய் தான இராணுவத்தில் மீண்டும இணைய விரும்பவில்லை என்றும் தன்னை தனது வீட்டுக்கு அனுப்பி வைக்குமாறும் கண்ணீர் மல்கக் கூறினார்.

இதனை அடுத்து கண்காணிப்புக் குழுவினர் அங்கிருந்து சென்று விடடனர்.

பின்னர் யாழ். மனிதவுரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி றுவான் சந்திரசேகர பிரஸ்தாப இராணுவச் சிப்பாயை இராணுவத்தினரிடம் ஒப்படைத்து வீட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை அடுத்து சிப்பாய் மனிதவுரிமை ஆணைக்குழு அதிகாரி தனது வாகனத்தில் ஏற்றி பலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றார்.

இராணுவச் சிப்பாயை கையளிகும் வைபவத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர் நிசாந்தன் கலந்து கொண்டார்.

இதேவேளை மயிலிட்டி 55வது பிரிகேட் இராணுவ முகாமில் கடமையாற்றிய மாத்தறையைச் சேர்ந்த ஜெகத்றுவான் குமார (வயது26) என்ற இராணுவச் சிப்பாய் கடந்த 4ம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவில் சரணடைந்தபோது அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி யுத்தநிறுத்தக் கண்கா ணிப்புக் குழுவிடம் ஒப்படைத்தமை தெரிந்ததே.

யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த இரண்டாவது சிப்பாய் இவராவார் (ம)(த-6)

### திருமலையைச் சேர்ந்த இளம் பெண்கள் இருவர் சடலமாக மீட்பு

(திருகோணமலை)

மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட இளம் பெண்கள் இருவரின் சடலங்கள் ஹபரணைப் பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியில் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த இளம் பெண்களின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

தலையில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும், இருவரும் மீன்வியாபாரத்தில் ஈடுபட்டுவந்ததாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (த)

### கிழக்கு மாகாணம்...

கிழக்கு மாகாணததைத் தனி அலகாகப் பிரிப்பதே ஒரே வழியாகும்.

மன்னராட்சிக் காலத்தில் கிழக்கு மாகாணம் சிங்களப் பிரதேசமாக விளங்கியதாகவும் தேசிய கூட்டுப பேரவை விடுத்துள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேசிய கூட்டுப் பேரவையில் 20பொது அமைப்புக்கள்அங்கம் வகிப்பது குறிப்பிடத் தக்கது. (த)

### செய்திக்கு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் முதலாம் திகதி வலம்புரியில் வெளிவந்த ''நண்பர்களின் கேலியால் இளைஞன் தற்கொலை'' என்ற செய்தியில் நண்பர்கள் கேலி செய்ததாலேயே தற்கொலை செய்து கொண்டதாக இறந்தவரின் உறவினர்கள் எவரும் மரண விசாரணையின் போது தெரிவிக்கவில்லையெனவும், பிரஸ்தாப இளைஞனின் தற்கொலைக்கும் இளைஞர்கள் கேலிசெய்தார்கள் என்பதற்கும் எந்தத் தொடர்புமில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### ஜனாதிபதி...

தனது முடிவை அறிவிப்பதாகவும் ஜனாதிபதி பிரதமரிடம்தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து தாய்லாந்தில் 31ம் திகதி நடை பெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை குறித்தும் ஜனாதிபதிக்கு பிரதமர் விளக்கிக் கூறியுள்ளார்.

இச் சந்திப்பின் போது பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன மற்றும் பாதுகாப்பு கவுன்சில் உறுப் பினர்களும் கலந்து கொண்டார்கள் (ம)


## தனிஸ் ரெக்ஸ்

நவாலி வீதி ஆனைக்கோட்டை

சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த வேளையில்

தனிஸ் ரெக்ஸ் ஸ்தாபனத்தின் மாபெரும் மலிவு விற்பனை



| | பழைய விலை | மலிவு விலை |
|---|---|---|
| சாறி | 450/= | 380/= |
| **சேட் வகைகள்** | | |
| ராடோ | 550/= | 400/= |
| சயினா BOX சேட் | 750/= | 350/= |
| பிளேன் BOX சேட் | 550/= | 320/= |
| 5வயது தொடக்கம்10வயதிற் குரியவர்களுக்கான சேட் | 150/= | 90/= |
| மாட்டின் சேட | 350/= | 300/= |
| டைட்டானிக் சேட் | 550/= | 200/= |
| GIORGIO சேட் | 350/= | 170/= |
| சோக்கோ ரவுசர் | 1100/= | 600/= |
| துணி பிறின்ட் | 120/= | 90/= |
| 3 வயது தொடக்கம் 8வயதுக் குரியவர்களுக்கான கவுண் | 950/= | 400/= |

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

பிளவுஸ் பீஸ் வகைகளுக்கும், பிறின்ட் பிளேன் துணிகளுக்கும் என பிரத்தியேக காட்சி அறை மேல்மாடியில் அமைக்கப்பட்டுள்ளது.

[C/5180]


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவி

### செல்வி கிருஸ்ணமூர்த்தி சிவதர்சினி

அவர்கள்

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 2002ல் 147 புள்ளிகள் பெற்று சித்திபெற்றமைக்காக அவரைப் பாராட்டி மேலும் அவர் கல்வியில் சிறப்புற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

1) கற்பகசோலை நன்மை அபிவிருத்திச்சங்கம்
2) கிராம அபிவிருத்திச் சங்கம்
3) மாதர் அபிவிருத்திச் சங்கம்
4) சனசமூக நிலையம்

[C/5183]

## யாழ்.பல்கலைக் கழகம்

13.10.2002 யாழ்.பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவில்

பங்குபற்றிய மாணவர்களின் கவனத்திற்கு

தங்கள் பட்டமளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட புகைப்படஙகளை 2002.11.29 ஆம் திகதி தொடக்கம் பின்வரும் ஒழுங்கில் யாழ். பல்கலைக்கழகக் கல்விக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| அமர்வு 1 | ~ | 2002.10.29 |
| அமர்வு 2 | ~ | 2002~10.30 |
| அமர்வு 3 | ~ | 2002.10.31 |
| அமர்வு 4&5 | ~ | 2002.11.01 |

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

[C/5182]


## தொய்வு (ASTHMA)

''பவள பஷ்பம்'' என்ற ஆயுள்வேத மருந்தால் இவ் வியாதி திரும்பத் திரும்ப வராதபடி பூரணமாக குணமடையச் செய்ய முடியும்.

2500 ஆண்டுகளுக்கு முன்பு அகஸ்திய முனிவரால் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளில் இதுவும் ஒன்று

முகவரி:
டாக்டர் பி.எட்வேட்.
16 இராசாவின் தோட்டம் லேன்
யாழ்ப்பாணம்.
T.P 021 – 3311

[6142]


## மரண அறிவித்தல்

### குஞ்சிதபாதக் குருக்கள் ஹரிகரசர்மா

(பொறியியலாளர், இலங்கை மின்சார சபை – கொழும்பு)

கொழும்பைச் சேர்ந்த குஞ்சித பாதக்குருக்கள் ஹரிகரசர்மா அவர்கள் 28.10.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ.சி.குஞ்சிதபாதக்குருக்கள் சாந்தநாயகி அம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ.சாம்ப சதாசிவக்குருக்கள், கௌரி அம்மா ஆகியோரின் மருமகனும் பவானி அம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சிவஸ்ரீ.சி.குஞ்சிதபாதக்குருக்கள்
38, ஸ்ரீராமநாதன் வீதி
கொழும்பு- 13
T.P - 01 - 330459

தகவல்
சோ.சந்திரசேகர சர்மா
சிவன் கோயில்
மயிலணி - சுன்னாகம்

(6151)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.10.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.